பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 39
கதிர் : 192

புதன்கிழமை
05 ஜூன் 2024

புதன்பொய்கை


முச்சந்தி முரளி



"ஆனாலும் இந்தமுறை மோடிக்கே மரணபயத்தை மக்கள் காட்டிப்போட்டினம் என்டதுதான் உண்மை பாருங்கோ"



# இந்தியாவில் மீண்டும் மோடி இராஜ்ஜியம்!

## தமிழகத்தில் தி.மு.க. முற்றான ஆதிக்கம்

புதுடில்லி, ஜூன் 5

இந்திய மக்களவைத் தேர்தல் முடிவுகள் நேற்று வெளியாகின. நேற்று இரவு 10 மணி வரையிலான நிலைவரத்தின் அடிப்படையில் மூன்றாவது முறையாக மோடி பிரதமராவது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

15





## மோடியின் வெற்றிக்கு யாழில் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

இந்திய மக்களவைத் தேர்தலில், ஆளும் பா.ஜ.க. வெற்றிபெற்றதைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்தில் நேற்று பட்டாசு வெடித்தும், இனிப்பு மற்றும் பலகாரங்கள் வழங்கியும் கொண்டாடப்பட்டுள்ளது.

15

## மோடி உங்களுக்கு என்ன செய்தார்?

### கொண்டாட்டத்தில் ஈடுபட்டோரிடம் இவ்வாறு கேட்டனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஜூன் 5

மோடியின் வெற்றிக்காக யாழ்ப்பாணத்தில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டோரிடம், மோடி உங்களுக்கு என்ன செய்தார்? என்று பொலிஸார் கேள்வி எழுப்பியுள்ளனர். மோடியின் வெற்றியையடுத்து, யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்துக்கு அருகில் சிவசேனை அமைப்பினர் வெடி

15


CEYLON MONEY MARKET FUND

உங்களுக்கு
மாதாந்த வருமானம்
தேவைப்படுகின்றதா?*

11.01% p.a.

+94 77 682 9066
+94 71 703 0000
+94 77 060 7733
info@ceylonam.com
www.ceylonam.com

எந்த நேரத்திலும் மீளப் பெற்றுக் கொள்ளலாம்!

Trustee & Custodian
Hatton National Bank PLC
Fund Approved by
Securities and Exchange Commission of Sri Lanka
Fund Manager
CEYLON
ASSET MANAGEMENT


### தேசிய மருத்துவமனையாகத் தரமுயர

## யாழ். போதனாவுக்கு ஆளணி தேவை!

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையை, தேசிய மருத்துவமனையாக தரமுயர்த்துவதற்கு ஆளணி நிரப்பப்படவேண்டியுள்ளது என்று யாழ்ப்பாணம்

15

## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி மன்னாருக்குப் பயணம்!

### சதொச மனிதப் புதைகுழியையும் பார்வையிட்டார்

மன்னார், ஜூன் 5

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் என்ட்ரோ பிரஞ்ச் மன்னாருக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

15

### புலிகள் உள்ளிட்ட

## 15 அமைப்புகளுடைய சொத்துகள் முடக்கம்!

கொழும்பு, ஜூன் 5

இலங்கை அரசாங்கம் 15 அமைப்புகள் மற்றும் 210 தனிநபர்களின் சொத்துகளை முடக்குவதாக அறிவித்துள்ளது.

15

## ஹெரோய்னுடன் யுவதி கைது!

வவுனியா, ஜூன் 5

வவுனியாவில் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

15

## புலனாய்வுத்துறைப் போராளி விநாயகம் பிரான்ஸில் மறைவு!



கொழும்பு, ஜூன் 5

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் புலனாய்வுத்துறை முன்னாள் போராளியான விநாயகம் பிரான்ஸில் சாவடைந்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரும் புலனாய்வுத்துறைப் போராளியுமான விநாயகம் இறுதிப் போரின் பின்னர் புலம்

15



கட்டுப்பாட்டை இழந்து

## வீட்டுக்குள் புகுந்தது பொலிஸ் வாகனம்

வவுனியா, ஜூன் 5

நெடுங்கேணியில் கட்டுப்பாட்டை இழந்த பொலிஸ் வாகனம் வீட்டுக்குள் புகுந்தது. இந்தச் சம்பவம் நெடுங்கேணி நகரப் பகுதியில் நேற்று மாலை நடைபெற்றது.

முல்லைத்தீவு – புளியங்குளம் பிரதான வீதியில் பயணித்துக்கொண்டிருந்த புளியங்குளம் பொலிஸ் நிலையத்துக்குச் சொந்தமான வாகனம் திடீரென கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகில் இருந்த வீட்டுக்குள் சென்று விபத்துக்குள்ளாகியது. சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அருகிலுள்ள கொட்டகையில் 40 மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்த நிலையில், அவர்கள் தெய்வாதீனமாகத்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரம்வெட்ட முயன்றோர் கைது

ஒட்டுசுட்டான் ஒதுக்க காட்டில் மரம் வெட்ட முற்பட்ட மூவரை புதுக்குடியிருப்பு வனபரிபாலன திணைக்களத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்துள்ளனர்.

தேராவில் - ஒட்டுசுட்டான் ஒதுக்ககாட்டில் மரத்தை வெட்ட முற்படுவதாகக் கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விசேட அதிரடிப் படையினருடன் விரைந்த திணைக்களத்தினர், பாலை மரத்தை வெட்ட முற்பட்ட மூவரைக் கைதுசெய்தனர். இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட மூவருக்கும் எதிராக முல்லைத் தீவு நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-25-125)

# போலி மருத்துவர் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம், ஜூன் 5

கனடாவில் வசிப்போரை இலக்கு வைத்து, கோடிக்கணக்கான பண மோசடியில் ஈடுபட்ட போலி மருத்துவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் கனடாவில் இருப்பவர்களிடம் தன்னை ஒரு மருத்துவர் என்று போலியாக அடையாளப்படுத்தியுள்ளார். தான் புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம் கனடாவுக்குச் செல்லவுள்ளதாகவும், யாழ். நகரில் தனக்கு காணி இருப்பதாகவும் தெரிவித்து, பொய்யான ஆவணங்களைத் தயாரித்து அனுப்பி ஒன்றரைக்கோடி ரூபாவை மோசடி செய்துள்ளார். இது தொடர்பில் யாழ்ப்பாணம் குற்றவிசாரணைப் பிரிவினரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மேற்படி சந்தேக நபரை நேற்றுமுன்தினம் கைது செய்தனர். அவர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொலிஸார் நடத்திய மேலதிக விசாரணைகளில், அந்த இளைஞனின் திறன்பேசியிலிருந்து பல பெண்களின் ஆபாசப் படங்கள் மற்றும் வீடியோக்கள் மீட்கப்பட்டுள்ளன. அது தொடர்பிலும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அத்துடன், இளைஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணைகளை முன்னெடுத்தவேளை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல போலி உறுதி முடிப்புகள், காணி மோசடிகள் உள்ளிட்ட பல்வேறு சம்பவங்களுடன் அவர் தொடர்புபட்டுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இளைஞன் தனித்து குறித்த மோசடிகளில் ஈடுபடவில்லை எனவும், இவருக்கு பின்னால் குழுவொன்று உள்ளதாகவும் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-26)

# சுங்கத்திணைக்களத்திடம் தகவல்கள் இல்லை

### தேசிய கணக்காய்வு நிறுவனம் சாடல்

கொழும்பு, ஜூன் 5

சுங்கத்திணைக்கள அதிகாரிகளுள் பலர் பட்டமேற்படிப்புக் கற்கைநெறிகளை நிறைவு செய்தமை பற்றிய எதுவித தகவல்களையும் சுங்கத்திணைக் க்களம் வெளியிடவில்லை என தேசிய கணக்காய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

323 சுங்கத்திணைக்கள அதிகாரிகளின் பட்டமேற்படிப்பு கற்கைகளுக்கென 128 மில்லியன் ரூபாவை சுங்கத்திணைக்களம் செலவு செய்துள்ளது. ஆனால் 149 பேர் மாத்திரமே பட்டமேற்படிப்பு கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்து, சான்றிதழ்களை சமர்ப்பித்துள்ளனர். மிகுதி 174 பேரும் கற்கைநெறிகளை தொடரவில்லையா? இடையில் நிறுத்தினார்களா? அல்லது பூர்த்தி செய்தார்களா? என்பது பற்றி எதுவித தகவலும் சுங்கத்திணைக்களத்திடம் இல்லை என்பதை தேசிய கணக்காய்வு நிறுவனம் கண்டு பிடித்துள்ளது. (ஒ-25)

## சிறிகொத்தாவை கையளியுங்கள்

கொழும்பு, ஜூன் 5

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமைச் செயலகமான சிறிகொத்தாவை தம்மிடம் கையளிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி தேர்தல் முகாமையாளர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, அவர் நடத்திய ஊடக மாநாட்டில் மேலும் தெரிவித்ததாவது:-

நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் உறுப்பினர்கள். நாங்கள் அங்கிருந்து எமது நடவடிக்கைகளை முன்னெடுப்போம், ரணில் ஐக்கிய தேசியக்கட்சிக்குத் தலைவராக இருக்கட்டும் அதைப்பற்றி எமக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் நாங்கள் சிறிகொத்தாவிலிருந்து எமது நடவடிக்கைகளை முன்னெடுப்போம் - என்றார். (ப-6)

## மரண அறிவித்தல்



தோற்றம் 05.11.1956

மறைவு 04.06.2024

### வரதராஜன் ஜராங்கினி

தொண்டமானாறு பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வரதராஜன் ஜராங்கினி அவர்கள் நேற்று (04.06.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகன் ரோகினியின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தசாமி பாக்கியம் அவர்களின் மூத்த மருமகளும் கந்தசாமி வரதராஜன் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற கந்தசாமி தளையசிங்கம், சீதாங்கனி, சீதாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கனிமொழி (Becom Swizz), கனிமதுரா, மாதுகா (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகஸ்தர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யுபாகரன், அஜந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் அஜித்தா, இனியா ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2024) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பி.ப. 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக காட்டுப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி
தொண்டமானாறு.

தகவல்:
குடும்பத்தினர்
077 [illegible]

## மரண அறிவித்தல்



தோற்றம் 01.06.1934

மறைவு: 04.06.2024

### சின்னத்துரை பாலராஜா

யாழ்ப்பாணம் உடுவிலை பிறப்பிடமாகவும், திருகோணமலை, தம்பலகாமத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பாலராஜா அவர்கள் நேற்று (04.06.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற முத்துசின்னத்துரை மற்றும் சிவபாக்கியம் தம்பதிகளின் அருமை மகனும், காலம் சென்ற சுப்பிரமணியம் மற்றும் கமலம் தம்பதிகளின் மூத்த மருமகனும் தர்மினி (சுவிஸ்), வசந்தினி (சுவிஸ்), விஜேந்தினி (கனடா), சிவானி (சுவிஸ்), ஜராகினி (கனடா), காலஞ்சென்ற முகுந்தன், தாரணி (சுவிஸ்), கீத்தா (அமெரிக்கா), முகுந்தன் (பாரதிபுரம் தம்பலகாமம்) ஆகியோரின் தகப்பனாரும், அமிர்தலிங்கம் (தயாளன்-முதலியார் கமம், இலுப்பைக்கடவை சுவிஸ்) ஜெயதீசன்- (உடுவில்-சுவிஸ்), அம்பிகாநிதி (கனடா), சாந்தலிங்கம் (சுவிஸ்), லோகநாதன் (கனடா), ஜெயகாந்தன் (சுவிஸ்), சிவசுந்தர் (அமெரிக்கா), ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சின்னத்துரை பாலசிங்கம் (கல்வியங்காடு), சறோஜினிதேவி (மருதனார்மடம்), ஜெயமலர் (கொழும்பு), காலம் காலஞ்சென்ற சாரதாதேவி, ஜெகஜோதி (ஜோய்-லண்டன்) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற மங்கையக்கரசி பாலசிங்கம் (கனடா), காலஞ்சென்ற கல்யாணசுந்தரேசன் (மருதனார்மடம்), நித்தியானந்தன் (கொழும்பு), காலஞ்சென்ற தர்மசீலன் அளவெட்டி/மருதனார்மடம்), புஸ்பநாதன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் கார்த்திகா, ஆதவன், கௌதமன், பவித்திரா, அஷாந், அஞ்சுதா, விபுஜா, யஷாந், சாங்கவி, சுபோதன், செந்தூரன், அச்சுதன், ஹரிகரன், ஹம்ஷத்வன், காயத்திரி, புருஷோத்தமன், ஷாலினி, மிதுன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஜானகி, வெற்றி, இசை ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (05.06.2024) புதன்கிழமை காலை 09.00 மணிக்கு மானிப்பாய் வீதி, சிங்கம் ஒழுங்கை, உடுவிலில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
வசந்தினி (சுதா) 077 547 4406
ஜராகினி (கிருஸ்னா) 074 050 3440

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 669) V-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*சீரற்ற காலநிலையால்*

# சேதமடைந்த வீடுகளை பொறுப்பேற்கும் அரசு!



கொழும்பு, ஜூன் 5

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும், முழுமையாக சேதமடைந்த வீடுகளை அரச செலவில் முப்படையினரின் உதவியுடன் மீளக் கட்டுவதற்குமான முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள பிரேரணைக்கே அனுமதியளிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, உலக சுற்றாடல் தினக் கொண்டாட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காகப் பயன்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் பணிப்புரை விடுத்துள்ளார். (ச-இ)

# 250 புதிய பாலங்கள் விரைவில்

நாடு முழுவதும் 250 புதிய பாலங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். நெதர்லாந்தின் பங்களிப்புடன் இந்தத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையும் போது குறைந்த வருமானம்பெறும் மக்களும் பயனடைவதை உறுதி செய்யவேண்டும். கிராமப்புறங்களில் உள்ள மக்கள் மீது அதிக கவனம் செலுத்துவதன் மூலம் வறுமையை 10 வீதம் வரை குறைக்கவேண்டும் என்பதே அரசின் எதிர்பார்ப்பு என்றும் அவர்மேலும் குறிப்பிட்டார். (ச)

# இரண்டு மாதங்களுக்குள் அபிவிருத்தித் திட்டங்கள்!

*அரசாங்கம் உத்தரவு*

**கொழும்பு, ஜூன் 5**

**12 பில்லியன் ரூபா விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் இரண்டு மாதங்களுக்குள் பூர்த்தியாக்குமாறு அனைத்து அமைச்சுகள், மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும், அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.**

சில அதிகாரிகள் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைக்கவில்லை என குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, நிதியமைச்சு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஒத்துழைக்காத அதிகாரிகளை நீக்கி விட்டு அவர்களுக்குப் பதிலாக வேறு அதிகாரிகளை நியமித்து, குறித்த திட்டங்களைப் பூர்த்தியாக்குமாறு மேலதிகாரிகளுக்கு அறிவித்ததுடன் ஒத்துழைக்காத அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிட்டுள்ளது. (ப-6)

# மோதலில் முடிவடைந்த ஆளுங்கட்சிக் கூட்டம்

கொழும்பு, ஜூன் 5

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடந்தபோது ஏற்பட்ட மோதலில் நாடாளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ச காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கண்டி மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு விவகாரம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்சவுக்கும் சக நாடாளுமன்ற உறுப்பினரான மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு இடையில் காரசாரமான வார்த்தைப் பரிமாற்றம் இடம்பெற்றது.

கூட்டத்தின் முடிவில் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கும் குணதிலக ராஜபக்சவுக்கும் இடையில் மீண்டும் வாக்குவாதம் ஏற்பட்டது.

மஹிந்தானந்த அளுத்கமகே அவரைத் தள்ள முற்பட்டபோது குணதிலக ராஜபக்ச மாடிப்படியில் வீழ்ந்ததில் அவரின் கால் எலும்பில் முறிவு ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குணதிலக ராஜபக்சவுடன் தாம் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் ஆனால் அவரைத் தள்ள முயற்சிக்கவில்லை என்றும் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். (இ)

# மழை குறையும்

கொழும்பு, ஜூன் 5

தென்மேற்குப் பருவப் பெயர்ச்சியால் நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை நேற்றுமுதல் தற்காலிகமாகக் குறையும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. சில மாவட்டங்களில் இடையிடையே மழை பெய்யும் என்றும், நாட்டில் பரவலாக மாலை அல்லது இரவு வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் எதிர்வுகூறப்பட்டுள்ளது. (எ-இ)

# வெள்ளம் பார்க்கச் சென்றவர் பலி

கொழும்பு, ஜூன் 5

புலத்சிங்களப் பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தைப் பார்க்கப் படகில் சென்றவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை நடந்துள்ளது. படகு ஒன்றில் 20 பேர் கொண்ட குழு ஒன்று சென்றபோது படகு உயர் மின்னழுத்தக் கம்பியில் மோதியதில் மின்சாரம் தாக்கியுள்ளது. (எ-இ)

# கடலில் தத்தளித்த மீனவர்கள் மீட்பு

காலி கடற்கரையிலிருந்து 480 கடல் மைல் தூரத்தில் தத்தளித்துக்கொண்டிருந்த ஆறு மீனவர்களை, கடல்சார் மீட்பு அணியின் உதவியுடன் கடற்படையினர் கடந்த வெள்ளிக்கிழமை மீட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலி துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். (ஒ-25-6)

# புதினம் தெரியுமோ?

ஒருமாதிரி இந்தியாவில எலக்சன் முடிஞ்சு ரிசல்ட்டும் வந்திட்டுது. ஆனால் இஞ்ச எப்ப எலக்சன் நடக்கும்? எந்த எலக்சன் நடக்கும்? எண்டதை வெத்திலையில மை போட்டுப் பார்த்தாலும் கண்டுபிடிக்க ஏலாமல் கிடக்குது. என்னதான் மோடியை எல்லாரும் சர்வாதிகாரி மாதிரி வர்ணிச்சாலும், அந்தாள் அந்தந்த நேரத்துக்கு எல்லா எலக்சனையும் வைக்குது. ஆனால்இஞ்ச ஜெண் டில்மென் எண்டு கோட் சூட் போட்ட ரணிலார் தான் எலக்சனை வைக்காமல் ஒளிச்சுப் பிடிச்சு விளையா டிக்கொண்டு இருக்கிறார். எவ்வளவுகாலம் தான் அவரும் இப்பிடிப் பேய்க்காட்ட ஏலும்? எப்பிடியோ ஆள் ஆய்ஞ்சு ஓய்ஞ்சு எலக்சன் எண்ட கட்டுக்கொடிக்கு வரத்தானே வேணும். அவரோட ஒட்டிக்கொண்டிருக்கிறவைக்கு அவர் என்ன எலக்சனுக்கு பிளான் போடுறார் எண்டது கொஞ்சமெண்டாலும் விளங்கியிருக்கும் . அதால இப்பவே மெல்ல மெல்ல எலக்சன் அடுக்குகளைச் சத்தம் சந்தடியில்லாமல் பாக்க வெளிக்கிட்டுட்டினம்.

தியேட்டர்கார மீன்குஞ்சு அமைச்சரும் பழையபடி தன்ர வித்தையைக் காட்டி, எல்லாரையும் தன்ர பக்கம் கொண்டுவாற வேலையளைத் தொடங்கிட்டாராம். சமுர்த்தி ஒப்பீஸர்மாருக்கு எண்டு ஒரு தொழிற்சங்கம் இருக்கு. பிரதேச செயலகங்களில இருக்கிற கிளைச்சங்கங்களுக்கு தெரிவு நடந்து. பிறகு அதில இருந்து மாவட்டக்கிளைக்கு ஆக்களைத் தெரிவு செய்யிறவை. இவ்வளவு காலமும் இதெல்லாம் ஒழுங்காத்தான் நடந்து வந்தது. இப்பிடியிருக்கேக்க இந்தச் சங்கத்துக்குள்ள மூக்கை நுழைச்சிருக்கிறார் மீன்குஞ்சு அமைச்சர். ரண்டு மாதத்துக்கு முதல் யாழ்ப்பாணத்தில உள்ள மண்டபம் ஒண்டுக்கு, யாழ்ப்பாணத்தில உள்ள எல்லாச் சமுர்த்தி உத்தியோகத்தர்மாரையும் கட்டாயம் வரச்சொல்லி அமைச்சர் ஓர்டர் போட்டிருக்கிறார். அங்க 'உங்கட சங்கங்கள் எல்லாம் இப்ப ஒழுங்கா இயங்கிறேலை. அதால நான் மாவட்டச் சங்கத்துக்கு தற்காலிகமா ஒரு 'வலுவூட்டல்' குழுவைப் போடுறன். அவை எல்லாப் பிரதேச செயலகங்களுக்கும் போய், அங்கத்தைக் கிளையளைத் தெரிவு செய்யட்டும்' எண்டு சொல்லியிருக்கிறார். சொன்னதோட நிக்காமல் அந்த வலுவூட்டல் குழுவைக் கொண்டு, பிரதேசக் கிளையளையும் தெரிவு செய்திருக்கிறார்.

பிறகு பிரதேச செயலகக் கிளையளில உள்ளவையை கிட்டடியில கூப்பிட்டு மாவட்டக்கிளையையும் தெரிவு செய்யச் சொல்லியிருக்கிறார்.

அதில கொஞ்சம் காரசாரமான விவாதங்கள் நடந்திருக்கு. முந்தி சங்கத்தில இருந்த தியேட்டக்காரரின்ர விசுவாசிகள் பேந்து 'அமுல்பேபியின்ர' காலத்தில அவரோட ஒட்டிக்கொண்டிருந்தவை. இவை கனகாலமா சங்கத்தின்ர கணக்கு வழக்குகள் காட்டேல எண்டு மற்றத்தரப்பாக்கள் சொல்லியிருக்கினம். மாவட்டக் கிளை தெரிவு நடக்கேக்க, முந்தி இருந்தவையும் போட்டியிட நிண்டிருக்கினம். அப்ப அங்க இருந்தவை அவையின்ர கணக்கறிக்கை கேக்க அவை கோபத்தில வெளியில போட்டினமாம் . இதுவும் அமைச்சருக்கு சாதகமாப் போட்டுது. அவர் தனக்கேத்த ஆக்களை மாவட்டக் கிளைக்கு போட்டிருக்கிறார்.அதின்ர தலைவரா வேற கட்சிக்காரர் இருக்கிறார் எண்டும், அதால கட்சி சார்பில்லாத சங்கம் எண்டும் அந்தச் சங்கக்காரர் சொல்லுகினம். ஆனால் மண்டையில இருந்த கொண்டையை மறந்திட்டும், புதுசா தெரிவான சங்கக்காரர், கூட்டம் நடந்த அடுத்தநாளே தியேட்டரில போய் அவரைச் சந்திச்சிருக்கினம். ஆமைபுகுந்த வீடும் தியேட்டர்காரர் தலையிட்ட விசயமும் உருப்பட்டதா சரித்திரம் இல்லை.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உகண்டாவை இலகுவாக வீழ்த்தியது ஆப்கன் அணி



ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் 5 ஆவது ஆட்டத்தில் ஆப்கன் அணி, 125 ஓட்டங்கள் வித்தியாசத்தில் உகண்டா அணியை இலகுவாக வீழ்த்தியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற உகண்டா அணி களத்தடுப்பைத் தெரிவுசெய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கன் அணி 2:0 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 183 ஓட்டங்களைப் பெற்றது. ஆப்கன் அணி சார்பில் குர்பாஸ் 76 ஓட்டங்களையும், சத்ரன் 70 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உகண்டா அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 58 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பந்துவீச்சில் ஆப்கன் அணி சார்பில் பசல்ஹக் பாருக்கி 9 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். (எ)

## வயலில் தேங்கும் நீரை வெளியேற்றுக

*மாற்றுப் பயிர் விவசாயிகளுக்கு ஆலோசனை*

மன்னார், ஜூன் 5

தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக மன்னார் மாவட்டத்திலுள்ள வயல் நிலங்களில் தேங்கி வரும் நீரை உடனடியாக வெளியேற்றுவதற்கான செயற்பாட்டில் விவசாயிகள் ஈடுபடவேண்டும் என மன்னார் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி சகிலா பானு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மன்னார் மாவட்ட விவசாயிகள் தற்பொழுது நெற்செய்கைக்கு மாற்றீட்டுப் பயிராக வயல்களில் பயறு மற்றும் கடலை போன்றவற்றை விதைத்துள்ளனர். அவற்றுக்கு பாதிப்பு ஏற்படாது இருப்பதற்கு சம்பந்தப்பட்ட விவசாயிகள் உடனடியாக வயலில் தேங்கியிருக்கும் நீரை வெளியேற்றி பயிர்களை பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

இந்தப்பயிர்ச்செய்கை பரவலாக 5 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் செய்கை பண்ணப்பட்டதாகவும் அரசாங்கத்தின் உதவியுடன் ஆயிரத்து 500 ஏக்கர் செய்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-25-60)

## மார்க்கண்டு சுவாமி குருபூசை தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

தவத்திரு மார்க்கண்டுசுவாமியின் 40ஆவது ஆண்டு குருபூசைத் தினம் இன்று யாழ்ப்பாணம் கைதடியில் நடைபெறவுள்ளது.

மு.ப. 10 மணிக்கு நற்சிந்தனைப் பாராயணமும், 11.30 மணிக்கு அபிஷேக ஆராதனையும் இடம்பெறும். தொடர்ந்து குருபூசை மலர் வெளியிடப்படவுள்ளது.

நற்சிந்தனைப் பாடல் போட்டியில் பங்குபற்றிய சிறார்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ச-இ)

## மர நடுகையும் கண்காட்சியும்

யாழ்ப்பாணம், ஜூன் 5

உலக சூழல் தினத்தை முன்னிட்டு, கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக் கணித, விஞ்ஞான மன்றம் ஏற்பாடு செய்த, கணித, விஞ்ஞான உபகரணக் கண்காட்சி மற்றும் மர நடுகை நிகழ்வு என்பன கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

கலாசாலை முதல்வர் ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகப் புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி நா.பிரதீபராஜா பிரதம விருந்தினராகவும், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் த.சுபோகரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-66)

## முதிரை மரக் குற்றிகளை பலகையாக்கியோர் கைது



முல்லைத்தீவு, ஜூன் 5

முல்லைத்தீவு - முள்ளியவளை மதபாலசிங்கபுரம் ஒதுக்கக்காட்டுப் பகுதியில் முதிரை மரக் குற்றிகளை பலகையாக உருமாற்றம் செய்ய முயற்சித்த இருவரை எச்சரிக்கை வேட்டு வைத்து முல்லைத்தீவு மாவட்ட முள்ளியவளை வனபரிபாலன திணைக்களத்தினர் கைதுசெய்துள்ளனர்.

வனபரிபாலன திணைக்களத்தினருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைவாக கடந்த சனிக்கிழமை இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான முதிரை மரப்பலகைகள் கைப்பற்றப்பட்டன .

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-125)



சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தின் 13 இலட்சம் ரூபா நிதிப் பங்களிப்பில் செட்டிகுளம் கணேசபுரம் ஸ்ரீசித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார். (25-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிரச்சினைகள் ஏற்படக்கூடும். எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். ஆஞ்சநேயரை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். பிள்ளைகள் மூலமும் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. செலவுகள் ஏற்படும். மற்றவர்களுடன் வீண் விவாதம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. உடல்நலனில் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மனதில் இனம் தெரியாத சோர்வு உண்டாகலாம். உடல்நலனில் கவனம் தேவை. பிள்ளைகளால் வீண் செலவுகள் ஏற்படும். குடும்பப் பெரியவர்களிடம் பேசும்போது பொறுமை மிக அவசியம்.

**கடகம்:** சங்கடம் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களால் சிலருக்கு எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும். உற்சாகமாக இருப்பீர்கள். இலாபம் கிடைக்கும்.

**சிம்மம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். தொடங்கிய காரியங்கள் அனுகூலமாக முடியும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும்.

**கன்னி:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வீண் விவாதத்தில் ஈடுபடவேண்டாம்.

**துலாம்:** முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்கவேண்டாம். உடல்நலனில் கவனம் தேவை. வியாபாரத்தில் விற்பனை வழக்கம் போலவே நடைபெறும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும்..

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்களில் சிறுசிறு தடைகள் உண்டாகும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. காரியம் அனுகூலமாக முடியும்.

**மகரம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முக்கியமான முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும். எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். பெருமை உண்டாகும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரக் கொலையாளி எலான் மஸ்க் அல்லர்

## அமைச்சர் மனுஷ தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 5

எலான் மஸ்க் பொருளாதார கொலையாளி என்று சுனில் ஹந்துன்நெத்தி அழைப்பதை நான் சமூக ஊடகத்தில் பார்த்தேன். அவர் கூறுவது போன்று எலான் மஸ்க் பொருளாதாரக் கொலையாளி அல்ல. மாறாக அவர் உலகப் பொருளாதாரத்தையே மாற்றியமைத்த சிறந்த தொழில் முயற்சியாளர். அவ்வாறான முன்னேற்றத்தை விரும்பாதவர்கள் அவரைப் பொருளாதாரக் கொலையாளி என்று அழைக்கின்றனர் என அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்

தொழில் மற்றும் வெளிநாட்டு அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்படுகின்ற 'ஜயகமு ஸ்ரீலங்கா' மக்கள் நடமாடும்சேவை தேசிய வேலைத் திட்டத்தின் இரண்டாம் நாள் நிகழ்வு பதுளை கால்பந்து விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார், அவர் மேலும் தெரிவித்ததாவது:-


உலகின் முதன்மை கோடீஸ்வரரான எலான் மஸ்க் போன்ற தொழில்முனைவோர் எமது நாட்டுக்கு வருகை தருவது பொருளாதாரரீதியாக துன்பப்படும் மக்களின் வாழ்வில் முன்னேற் றத்தை ஏற்படுத்தும். அவர் இலங்கையில் டெஸ்லாவின் கிளையொன்றை ஆரம்பிக்கவுள்ளேன் என ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார். அவர் பல்கலைக்கழக கல்வியைப் பெறாவிட்டாலும் அவரின் செயற்பாடுகளால் உலக மக்களின் கவனத்தை ஈர்த்தார். இவரைப் போன்ற ஒருவர் இலங்கைக்கு வரும்போது நாட்டின் தொழில்நுட்பம் உலகத்துடன் இணைக்கப்படும்.

சில அரசியல் கட்சிகளுக்கு நாம் இவ்வாறு முன்னேற்றம் அடைவது விருப்பம் இல்லை. மாறாக நாம் தொடர்ந்தும் வறுமையிலும் அயல் நாடுகளின் உதவிகளைப் பெற்று வாழவே விரும்பு கிறார்கள். நமது இளைஞர்கள் வெளிநாடு சென்று தொழில் புரிந்தால் இக்கட்சிக் காரர்களுக்கு அரசியல் செய்யமுடியாது என்பதால் பல பொய் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார்கள் - என்றார். (ஒ-25)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியில்
28.05.1932



ஆண்டவன் அடியில்
08.05.2024

கடந்த 08.05.2024 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

### அமரர் சிவலிங்கம் தேவகுஞ்சரம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (05.06.2024) புதன்கிழமை காலை 5.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, அஸ்தி செல்வச்சந்நிதி புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். 07.06.2024 அன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ள சபிண்டீகரணக் கிரியையிலும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


கதிரிப்பாய், அச்சுவேலி. குடும்பத்தினர்.

(CS 42566) A-1

---

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
04
04
1949



உதிர்வு
16
06
2023

### அமரர் நடராசா வாமசிவன்

அன்பின் அப்பா!

எட்டமுடியாத தொலைவு சென்று ஆண்டு ஒன்றல்ல
ஓராயிரம் ஆகலாம்.
காலங்கள் விடைபெறலாம் - நெஞ்சில் பதிந்த
நினைவலைகள் என்றென்றும் நம்மை
விட்டு நீங்காது.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

66/1 ஆனந்தன் வடலிவீதி
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.


தகவல்:
குடும்பத்தினர்.

(CS/28371) J-1

---

## மரண அறிவித்தல்

மலர்வு
22
03
1949



உதிர்வு
02
06
2024

### கனகசபை சின்னத்துரை

(ஓய்வுபெற்ற களஞ்சிய பொறுப்பாளர்)

பருத்தித்துறை புலோலி வடக்கை பிறப்பிடமாகவும், பருத்தித்துறை மற்றும் தொல்புரம் வடக்கம்பரையை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை சின்னத்துரை அவர்கள் கடந்த (ஞாயிற்றுக்கிழமை) 02.06.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை அன்னம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராசா சீதாதேவியின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சற்குணதேவியின் (அப்பாச்சி), அன்புக் கணவரும் காலஞ்சென்ற நடராஜா சிவசுப்பிரமணியம், ராமநாதன் மற்றும் கந்தசாமி, பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சஞ்ஜேயின் அன்புத்தந்தையும், ஜனனியின் அன்பு மாமனாரும் ஜோஷ்னா, சயன் ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற நல்லைநாதன், பேரின்பநாயகி ஆனந்தராசா (பேபி), ஆனந்தக்குமாரசாமி மற்றும் நாகேஸ்வரி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.06.2024) வியாழக்கிழமை காலை 08.30 மணியளவில் யாழ்ப்பாணம் வைற்ஹவுஸ் மலர்ச்சாலையில் (white House Funeral Home Kandy Road Jaffna) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டு. வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]டை, பருத்தித்துறை.
0771793583

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 42567) V-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அருள்மிகு காளி அம்பாள் தேவஸ்தானம்

## திருவண்ணை கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

# திரிதள இராஜகோபுர கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா

## கர்மாரம்பம்

07.06.2024 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணி - 7.00 மணி

## யாகாரம்பம்

மாலை 4.00 மணி

## கலசம் வைத்தல்

மாலை 5.00 மணி - 6.00 மணி

## யாகபூஜை

08.06.2024 சனிக்கிழமை காலை 9.00 மணி - மாலை 6.00 மணி

## கும்பாபிஷேகம்

09.06.2024 ஞயிற்றுக்கிழமை காலை (மு.ப.) 10.38 தொடக்கம் 11.26 மணி

நிகழும் சர்வமங்கலகரமான குரோதி வருடம் வைகாசித்திங்கள் 27 ஆம் நாள் (09.06.2024) ஞாயிற்றுக்கிழமை புநர்பூச நட்சத்திரமும் திருதியை திதியும், சித்த யோகமும் கூடிய முற்பகல் 10.38 மணிமுதல் 11.26 மணிவரையுள்ள சிங்கலக்கின சுப வேளையில் காளி அம்பாளின் புதிய திரி (மூன்று) தள இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. காலை 8.00 மணிக்கு வசந்த மண்டப பூஜையும், 09.00 மணிக்கு இராஜகோபுர யாக மஹா பூர்ணாகுதியும் நடைபெற்று மு.ப.10.00மணிக்கு அம்பாள் வீதிவலம் வருதல், இராஜகோபுர பிரதான கும்பங்கள் வீதி வலம் வருதல் தொடர்ந்து குறிப்பிட்ட சுப வேளையில் இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெறும். அடியார்கள் ஆசாரசீலர்களாக வருகை தந்து அன்னையின் கிருபாகடாட்சம் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

தொ.பே.: 021 222 5770

தேவஸ்தான ஆதீனகர்த்தாக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஏமாறாதே, ஏமாற்றாதே!

வடக்கு மாகாணத்தில் - குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகளவான பண மோசடிச் சம்பவங்கள் அண்மைக்காலங்களில் நடந்திருக்கின்றன. இந்த மோசடிகள் லட்சங்களில் ஆரம்பித்து பல கோடிகள் வரையில் நீள்கின்றன. வெளிநாட்டுப் பயணம், காணி விற்பனை, இணையவழி ஏமாற்று, பகுதிநேர வேலை வாய்ப்பு என இந்த மோசடிகள் பல பரிணாமங்களில் நடந்தேறுகின்றன. ஏமாறுவோர் இருக்கும்வரையில் ஏமாற்றுவோர் இருக்கத்தான் செய்வார்கள். வடக்கில் - யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நாளாந்தம் வெளியாகும் மோசடிச் சம்பவங்கள் பற்றிய செய்திகளைப் பார்க்கும்போது இவ்வாறுதான் எண்ணத் தோன்றுகின்றது. நேற்று முன்தினம்கூட தன்னை மருத்துவர் என்று அறிமுகப்படுத்திக்கொண்டு மோசடி செய்த குற்றச்சாட்டில் 29 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கின்றார். அவரால் தயாரிக்கப்பட்ட போலி ஆவணங்களை நம்பி, கனடா நாட்டில் இருந்து சுமார் ஒன்றரைக் கோடி ரூபா அவரது கணக்கில் வைப்பிலிடப்பட்டிருக்கின்றது. இவ்வாறு இன்னும் பலர் ஏமாற்றப்பட்டிருக்கலாம். இது ஒரு சமீபத்திய உதாரணம் மட்டுமே. இவ்வாறான பல மோசடிச் சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன. இவ்வாறான மோசடிகள் தொடர்பாக பல எச்சரிக்கைகள் - விழிப்புணர்வுத் தகவல்கள் பாதுகாப்புத் தரப்புகளாலும் - ஊடகங்களாலும் வழங்கப்பட்டும் கூட மோசடியாளர்களிடம் சிக்கிக்கொள்வோர் குறைந்த பாடில்லை.

இவ்வாறான மோசடிகளுக்கு முதற்காரணம் மனிதர்களின் பேராசையும் ஒரு காரணம் என்பதை ஒப்புக்கொள்ளவே வேண்டும். அதைப் பயன்படுத்தியே மோசடியாளர்கள் தங்கள் காரியத்தைக் கச்சிதமாக முடித்துக்கொள்கின்றனர். அதீத ஆசையால் மோசடியாளர்களின் கவர்ச்சி வார்த்தைகளுக்கு மயங்கி பணத்தைப் பறிகொடுக்கின்றனர். அதே நேரம் சமூக ஊடகங்களில் நாம் பார்ப்பது, படிப்பது அனைத்துமே உண்மை என்ற மனநிலை இன்றைய பொதுப்புத்தியில் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதையும் மோசடியாளர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படும்வரையில் இவ்வாறான மோசடிகளைத் தடுப்பது இயலாத காரியமே. பொலிஸாரும், ஏனையோரும் மோசடியாளர்களைக் கைது செய்தாலும், ஏமாறுவோர் இருக்கும் வரையில் இவ்வாறான மோசடிகள் தொடர்ந்துகொண்டே இருக்கும். தொழில்நுட்ப வளர்ச்சி உச்சம் கண்டுள்ள தற்காலத்தில் எவரும் எதையும் உருவாக்க முடியும் என்ற நிலைமையே இருக்கின்றது. மோசடியாளர்களால் கூறப்படும் விடயங்களை - வழங்கப்படும் ஆவணங்களைச் சீர்தூக்கி ஆராய்ந்து பகுத்தறிந்து செயற்பட்டால் மட்டுமே மோசடியாளர்களிடம் இருந்து தப்பித்துக்கொள்ள முடியும்.

பணத்தை இழந்து விட்டு பின்னர் பொலிஸ் நிலையத்துக்கு அலைவதாலும் - பொலிஸ் தரப்பைக் குறைகூறுவதாலும் எதுவும் நடந்துவிடப்போவதில்லை. குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டாலும் இழந்த பணமோ - பொருளோ மீண்டும் உடனே கிடைத்துவிடும் என்பதற்கும் எந்த உத்தரவாதமும் இல்லை. அதனால் சிந்தித்துச் செயற்படுவதே ஆபத்தில் இருந்து காக்கும். அதை உணர்ந்து மக்கள் செயற்படுவது மட்டுமே இவ்வாறான மோசடிகளில் இருந்து தப்பிப்பதற்கான ஒரே வழி.



# தீவிரமாகின்றது டெங்குத் தொற்று



கொழும்பு, ஜூன் 5

**டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை கடந்த மே மாதத்தில் வேகமாக அதிகரித்துள்ளது என்றும், இது ஒரு தொற்றுநோயாக உருவெடுக்கக்கூடும் என்றும் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இது தொடர்பாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவுப் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளதாவது:-

தற்போது பெய்துவரும் மழை காரணமாக டெங்குத் தொற்று தீவிரமடையலாம். கடந்த ஓராண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்கள் அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரத்தில் டெங்கு அபாயத்துடன் கூடிய 15 மாவட்டங்களாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, குருநாகல், புத்தளம், பதுளை, இரத்தினபுரி, கேகாலை போன்றவை அடையாளம் காணப்பட்டுள்ளன. இரண்டு நாள்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால், உடனடியாக மருத்துவ சிகிச்சை பெறவேண்டியது அவசியம் - என்றார். (எ-இ)

## ரூ.1,700 சம்பள அதிகரிப்புக்கு தடைவிதிக்க நீதிமன்று மறுப்பு

தோட்டத்தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு ஆயிரத்து 700 ரூபா சம்பளமாக வழங்கப்படவேண்டுமென பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்காலத் தடைவிதிக்குமாறு தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

தோட்டத்தொழிலாளர்களுக்கு ஒரு நாளைக்கு ஆயிரத்து 700 ரூபா சம்பளமாக வழங்கப்படவேண்டுமென பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை வலிதற்றதாக்குமாறு பெருந்தோட்டமுதலாளிமார் சம்மேளனம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தது.

இந்த மனு மீதான விசாரணை நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இந்த மனு மீதான விசாரணையை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிமன்றம் அன்றையதினம் தொழிலமைச்சர் மனுஷ நாணயக்காரவை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளது. (ச-6)

## திரைப்படக் கல்லூரியாகும் திரைப்படக் கூட்டுத்தாபனம்!

தேசிய திரைப்படக்கூட்டுத்தாபனத்தை தேசிய திரைப்படக் கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்யப்படவுள்ளது என்றுஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். (ச-6)

## திறைசேரி உண்டியல்கள் ஏலம்

இரண்டு இலட்சத்து 35 ஆயிரம் மில்லியன் திறைசேரி உண்டியல்கள் ஏலத்தில் இன்று விடப்படுகின்றன என்று மத்தியவங்கி தெரிவித்துள்ளது. 91 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 40 ஆயிரம் மில்லியன் ரூபா திறைசேரி உண்டியல்களும் 182 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட திறைசேரி உண்டியல்களும், 364 நாள்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட ஒரு இலட்சத்து 20 ஆயிரம் மில்லியன் ரூபா திறைசேரி உண்டியல்களும் இவ்வாறு ஏலத்தில் விடப்பட வுள்ளன என்று மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (ச)

## காலாண்டுக்கு ஒருமுறை மின்கட்டணத் திருத்தம்

கொழும்பு, ஜூன் 5

ஒவ்வொரு வருடமும் காலாண்டுக்கு ஒரு முறை கட்டணத்தை திருத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

மின்சார நுகர்வோர் கட்டணத் திருத்தப் பிரேரணையை இறுதி செய்வது தொடர்பாக இலங்கை மின்சாரசபையின் கட்டணப் பிரிவினருடன் மேற்கொண்ட கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, ஜூலை மாதம் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்றும், இது தொடர்பான கட்டண முன்மொழிவு இந்த வாரம் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ச-இ)

### நாளை

06.06.2024

**வியாழக்கிழமை**

**வைகாசி - 24**

சுபநேரம் : 07.22 - 08.52

ராகுகாலம் : 01.22 - 02.52

### நாளொரு நல்வார்த்தை

**கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே**
**அது உன்னைக்கொன்று விடும்**
**கண்ணைத் திறந்து பார்**
**நீ அதைவென்று விடலாம்.**

**- அப்துல்கலாம்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளுடன் மூவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம் - கல்வியங்காட்டில் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தமைக்காக மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப் படையின் புலனாய்வுப் பிரிவினரால் அவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து முறையே 190 மில்லிகிராம், 120 மில்லிகிராம் மற்றும் 80 மில்லி கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள் ளது.

கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ-ம-125)


## வேலையாட்கள் தேவை

கொக்குவிலில் இயங்கும் AC திருத்தும் நிறுவனம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. வேலை தெரிந்தவர்கள், பழக விரும்புபவர்களும் இணைந்து கொள்ள முடியும்.

தொடர்பு: 070 499 499 5


## திரைப்படக் காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ்ப்பாணத்திலுள்ள தந்தை செல்வா கலையரங்கத்தில் எதிர்வரும் 8ஆம் திகதி மாலை 4 மணிக்கு 'பார்' எனும் ஹிந்தி மொழித் திரைப்படம், ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் திரையிடப்படவுள்ளது. தமிழ்த் திரைப்படங்களுக்கு மாற்றாக உலகின் பலமொழித் திரைப்படங்களைத் திரையிட்டு, அது தொடர்பான உரையாடல்களை மாதாந்தம் நடத்தத் தீர்மானிக்கப்பட் டுள்ள நிலையில், இந்தத் திட்டத்தின் ஓர் அம்சமாகவே இந்தத் திரையிடல் மேற்கொள்ளப்படவுள்ளது. காட்சிப்படுத்தல் இலவசம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம)


## கட்டடம் வாடகைக்கு

யாழ். நகரில் ரியூசன் சென்ரர் or காரியாலயம் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு.

077 345 0039
077 348 0039

நான் கொடுப்பதற்கு பழகிக் கொண்டேன்-காரணம் என்னிடம் அதிகம் இருப்பதால் அல்ல-இல்லாதவரின் வலியை புரிந்து கொண்டதால்

## (22) விற்பனைக்கு (22)

யாழ். வைத்தியசாலை வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 04 பரப்புக்காணியும், யாழ் வைத்தியசாலை வீதியில் நமசிவாயம் பாடசாலைக்கு முன்பாக 04 பரப்பு 04 குழி காணியும், யாழ். மின்சார நிலைய வீதியில் பழைய தபாற்கந்தோர் வீதியில் 4 1/2 பரப்புக்காணியும், யாழ். விக்ரோரியா வீதியில் 12 பரப்புக்காணியும், யாழ். வைத்தியசாலை வீதியில் 20 அடி அகலம் 200 அடி நீளமும் கொண்ட காணித்துண்டும், யாழ். தட்டார்தெரு சந்திக்கு அண்மையில் 2 1/2 பரப்புக்காணியும், யாழ். பெரிய கோயிலுக்கு அண்மையில் குருசோ வீதியில் 06 பரப்புக்காணியும் 03 பெரிய நவீன மாடி வீடும், மன்னார் நகருக்கு அண்மையில் நல்ல நிலையில் இயங்கிவரும் மில்லும் யாழ். கொட்டடியில் 5 பரப்புக்காணியும் விற்பனைக்கு உண்டு.


தொடர்புகளுக்கு:
கனகசபை தர்மகுலசிங்கம்
T.P: 077 723 2535

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

யாழ். பஸ் நிலையத்தை அண்டிய பகுதியில் பாவனையிலுள்ள ஒரு கைத்தொலைபேசி 04.06.2024 செவ்வாய்க்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதன் உரிமையாளர் தங்களுடைய தொலைபேசியின் அடையாளத்தை உறுதிப்படுத்தி கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தொடர்புக்கு: கனகசபை தர்மகுலசிங்கம்
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0777 232535


## மரண அறிவித்தல்



அருட்சகோதரி மேரி லொறன்ரினா சோசை தி.கு


மன்னார், வங்காலையைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி லொறன்ரினா சோசை தி.கு (04.06.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு (05.06.2024) புதன்கிழமை அன்று பி.ப 03.00 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்
மாகாணத் தலைவி.
121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(CS 28562) S-1

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
15.06.1942

மறைவு
07.05.2024

## அமரர் கிட்டினபிள்ளை நாகராசா

திதி : சதுர்த்தசி

பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் ஒளிவிளக்காய்
தாய்க்கு தாயாய் தந்தைக்கு தந்தையாய்
எமைவளர்த்த ஐயாவே...

கண் இமைக்கும் நேரத்தில் எமைவிட்டு பிரிந்து
நாட்கள் மாதங்கள் ஆகிவிட்டனவே ஐயா...
நீங்கள் இல்லாத இவ் உலகில்
தவிக்கின்றோம் நாம் இங்கே!

கவலையின்றி நாங்கள் வாழ்வதற்கு
சொத்து, பணம் சேர்ப்பதற்காய்
ஓய்வின்றி அயராது உழைத்து
எமை எல்லாம் வளர்த்து ஆளாக்கிய ஐயாவே...

ஐயாவே! உங்களுக்காக நீங்கள் வாழாது
உங்கள் பிள்ளைகளுக்கும், மருமக்களுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும்
ஆசைப்பட்டதெல்லாம் வாங்கிக்கொடுத்து
அன்பாய் வளர்த்தீரே ஐயா...

மண்ணில் மறைந்தாலும்
எத்தனை உறவுகள் இருந்தாலும்
நாம் தேடும் உறவு
நீங்கள் தான் ஐயா...

பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C&659) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடைகள் உங்களை நிறுத்திவிடாது, நீங்கள் அதனுள் புகுந்து செயற்படும்போது

- மைக்கேல் ஜோர்டன்



# புதன் பொய்கை

05.06.2024
புதன்கிழமை




# தமிழ்ப் பொதுவேட்பாளர் முயற்சி முட்டுச்சந்தில்!!

இரா.மயூதரன்

இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதித் தேர்தலுக்கான காலம் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அது நடக்குமா இல்லையா என்ற கேள்விக்கான விடைதேடும் முனைப்பில் ஸ்ரீலங்கா அரசு நாள்களை கடத்திக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தில் ஒருமித்த நிலைப்பாடு கானல் நீராக மாறி கண் முன்னே கலைந்து செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயம் என்பது தமிழ்த் தேசிய அரசியலுக்கோ தமிழர்களுக்கோ புதியதல்ல. ஆயுத மௌனிப்பின் பின்னரான கடந்த 15 ஆண்டுகளில் தமிழ்த் தேசிய அரசியல் என்பது அது சார்ந்திருக்கும் தமிழர்களுக்கானதாகவோ, தமிழர் தாயகத்தின் இருப்புக்கானதாகவோ அன்றி மற்றவர்களை ஆட்டுவிக்கும் பொம்மலாட்டக்காரர்களது நலன் சார்ந்ததாகவே மாறிவிட்டது. இந்த கையறுநிலைக்கு முற்றுப்புள்ளியாக தமிழ்த் தேசிய அரசியல் தரப்பினர் ஒரு பொதுப்புள்ளியில் இணையும் சந்தர்ப்பமாக தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயம் காணப்பட்டாலும், இன்றளவிலும் ஒன்றிணைய முடியாத நிலையே தெரிகின்றது. தமிழ்த் தேசியத்தின் பிரதிபலிப்பான, தாயகம், தேசியம், தன்னாட்சி என்கின்ற முழக்கத்தை முன்னிறுத்தியதாக தோற்றுவிக்கப்பட்ட கட்சிகள் எல்லாம் தேர்தல் அரசியலுக்குள் மூழ்கி நீச்சலடித்து வருகின்றமை காலக்கொடுமையாகும். இவ்வாறான பின்புலத்தில்தான் கட்சி நலன்களைக் கடந்து தேசமாகச் செயற்படுவதற்கான வழித்தடமாக இந்தப் பொதுவேட்பாளர் விடயம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## தமிழர்களின் பலவீனம்

தமிழர்களுக்கென வடக்கு - கிழக்கு தழுவியதாக வலுவான சிவில் சமூக கட்டமைப்பு ஒன்று இல்லாதுள்ளமை தற்போது பட்டவர்த்தனமாக உணரப்படுகின்றது. இதன் விளைவாக, அரசியல் கட்சிகளின் மேலாதிக்கம் தமிழ்ப் பொதுவேட்பாளர் விவகாரத்திலும் செல்வாக்குச் செலுத்தி அதன் மைய இலக்கில் இருந்து வெகு தொலைவுக்கு இழுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. 'எல்லோரும் ஒன்றிணைந்து கேட்டுக் கொண்டால் தமிழ்ப் பொதுவேட்பாளராக போட்டியிடத் தயாராக உள்ளேன்' என தமிழ் மக்கள் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வடமாகாண சபை முதலமைச்சருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அண்மையில் தெரிவித்திருந்தார். அவருடைய இந்தக் கருத்தானது தமிழ்ப் பொதுவேட்பாளர் கருத்தியலையே திசைதிருப்புவதாக அமைந்திருந்ததுடன் அதனை மையமாக கொண்டு ஊடகப்பரப்பில் ஏட்டிக்கு போட்டியான பதில்கள் வளர்ந்தனவே, உண்மையான விடயம் பின்னோக்கியே தள்ளப்பட்டிருந்தது. இது பிரதான இலக்கின் வெகு தொலைவிலேயே குறித்த முயற்சிகள் ஊசலாடிக் கொண்டிருப்பதனை பட்டவர்த்தனமாக்குகின்றது.

## பொதுவேட்பாளர் எத்தகையவர்?

இதுவரை காலமும் தமிழர்கள் தேசமாக வெளிப்படுத்திய ஆணைகள் அனைத்தும் தமிழ்த் தேசிய தலைமைகளால் மடைமாற்றப்பட்டு மலினப்படுத்தப்பட்டே வந்திருக்கின்றன. இவ்வாறான நிலையில் தான் மீளவும் தமிழர்கள் தேசமாக தமது நிலைப்பாட்டினை இடித்துரைக்க வேண்டிய அவசியமேற்பட்டுள்ளது. இதனால்தான், ஜனாதிபதித் தேர்தலை பொதுவேட்பாளர் ஊடாக எதிர்கொள்வது தமிழர்களுக்குப் பிரதான விடயமாக உள்ளது. பிரபலம் ஒருவரை கண்டறிந்து பொதுவேட்பாளராக முன்னிறுத்தி அரசியல் அங்கீகரத்தை பெற்றுக்கொடுப்பதென்பது பொருத்தப்பாடுடையதொன்றாக இருக்காது. தமிழர் தேசாபிமான உணர்வோடு கொள்கைவழி தடம்மாறாது பயணிக்கும் கலாசார வெளிக்குள் இருந்து என்றோ வெளிப்பட்டு விட்டாயிற்று. அதனால் தான் தமிழ்ப் பொதுவேட்பாளர் முன்னெடுப்பானது வரலாற்று திருப்புமுனையாக, காரிருள் சூழ்ந்திருக்கும் தமிழர்களது வாழ்வில் வழிகாட்டும் விடிவெள்ளியாக அமையும் வகையில் திட்டமிடப்படுவது இன்றியமையாதது ஆகும்.

இதேநேரம், மே தின உரையில் 'பலர் பொதுவேட்பாளரை முன்னிறுத்தினால் தமக்கு வேண்டிய சிங்கள வேட்பாளருக்கு வாக்களிக்க முடியாது போய்விடும் என்று அஞ்சுகின்றார்கள். அது தவறு. பொதுவேட்பாளருக்கு நாம் எமது முதல் வாக்கை அளித்துவிட்டு 2ஆம் 3ஆம் விருப்பு வாக்குகளை நாம் விரும்பும் சிங்கள வேட்பாளருக்கு அளிக்க முடியும்' என்று க.வி. விக்னேஸ்வரன் கருத்துத் தெரிவித்திருந்தார்.

தமிழ் வேட்பாளரை நிறுத்துங்கள் அதனை நான் வரவேற்கிறேன். ஆனால் 2ஆம், 3ஆம் வாக்குகள் வேண்டாம். அது அந்த வாக்களிப்பை பலவீனப்படுத்தும் என அதே மேடையிலேயே தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் பதிலளித்திருந்தார்.

தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தி ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வது என்ற மையப்புள்ளியில் ஒன்றிணைவே சவாலானதாக இருக்கையில், இப்படி பொதுவெளியில் வாதப் பிரதிவாதங்களை ஊக்குவிக்கும் வகையிலான கருத்துகளை வெளிப்படுத்துவது அரசியல் முதிர்ச்சியற்றதாகவே அமைந்துவிடுகிறது.

தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை முன்னிறுத்துவது என்ற கருத்தியலோடு முதலில் அனைவரும் ஒன்றித்து வரவேண்டும். அதன்பின்னர் பொது வேட்பாளராக பிரமுகர் ஒருவரை தேடுவதா அல்லது வட கிழக்கு தமிழர்களின் ஆதரவை குறிப்பிட்ட விடயத்துக்குக் கோருவதா என்பதை முடிவு செய்யவேண்டும். உட்கட்சிப் பூசல்கள் கடந்து வடக்கு - கிழக்கு தழுவியதாக, கட்சி அரசியல் கடந்து தேசமாக செயற்படுவதற்கு உளமார அனைத்து கட்சிகளும் அணியமாக வேண்டும். இவை அனைத்தும் ஊடக வெளிச்சம் படாதவகையில் மிகவும் இரகசியமான முறையில் உள்ளக கலந்துரையாடல்களாக மேற்கொள்ளப்பட்டே ஆகவேண்டும்.

எமக்குள்ளாகவே விடயத்தை குழப்பியடிப்பதற்கும் பலவீனப்படுத்துவதற்கும் பலர் காத்துக்கொண்டிருக்கையில் 'நிறைவாகும் வரை மறைவாக இரு' என்ற உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் வரிகளின் வழியே மேற்குறித்த விடயங்கள் அனைத்தும் நிகழ்ந்தாக வேண்டும். தமிழரசுக் கட்சியின் தலைமை தமிழ் மக்களின் நிலையில் நின்று முடிவெடுக்கும் திராணியற்ற நிலை பழைய செய்தியாகிப்போய்விட்டது. புதிய தலைவராக தெரிவாகி உட்கட்சி குழப்பத்தினால் கைக்கெட்டியது வாய்க்கெட்டாது பதிலொடுத்து நிற்கும் சிவஞானம் சிறீதரன் தரப்பினர் வெளிப்படையாகவே தமிழ்ப் பொதுவேட்பாளர் கருத்தியலை வரவேற்று வருகின்றனர். தமிழ்த் தேசியம் சார்ந்த பின்னணியில் தனது இருப்பினை தகவமைத்துக் கொண்டிருக்கும் சிறீதரன் தரப்பு இந்த முயற்சியின் இறுதிவரை அதனோடு இருப்பதாக காட்டிக்கொள்ள முடியுமே தீவிர செயல் வீச்சை ஏற்படுத்தும் வகையில் உட்கட்சி புரட்சியின் மூலம் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடாக அதனை மாற்றியமைக்கமுடியாது.

## பாம்புக்குத் தலை மீனுக்கு வால்

இந்த முடிவு எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாக இருப்பினும், தமிழ்ப் பொதுவேட்பாளர் கருத்தியல் எல்லைக்குள் தலையையும் தென்னிலங்கை மற்றும் வெளிச் சக்திகளிடம் வாலையும் காட்டும் விலாங்கு மீன்களாக வலம்வரும் முன்னாள் த.தே.கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் நிலைப்பாடு தமிழ்த்தேசிய அரசியலின் சாபக்கேடாகும். தேர்தல் புறக்கணிப்பு என்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடானது, மேற்குறித்த தரப்பினரது நிலைப்பாட்டிற்கு மாற்றான புரட்சிகர முடிவாக தென்பட்டாலும், வட கிழக்கு மக்களை வழிநடத்தும் கையாலாகாத்தனத்தை மூடிமறைக்கும் வகையில் எட்டாப்பழம் புளிக்கும் என்ற நிலைப்பாட்டின் வழியே எடுக்கப்பட்ட மிகமிக எளிமையான தீர்மானமாகும் என்பதை விளங்கிக்கொள்வது சுலபமாகும். ஆதரவுக்கும் எதிர்ப்புக்கும் இடையே ஊசலாடும் விலாங்கு மீன்களாக வலம்வரும் தமிழ்த் தேசியக் கட்சிகளை மனதில் இருத்தியே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனை நேரில் சந்தித்து தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தில் ஒன்றுபட முடியுமா...? அப்படி ஒன்றுபட்டாலும் ஒருவரை பொது வேட்பாளராக நிறுத்த முடியுமா..? என்று ஆணித்தரமான நிலையில் நின்று எழுப்பிய கேள்வி தமிழ்த் தேசிய அரசியல் மீதான பேரவமானமாகும். அதுமாத்திரமல்ல வெளியே இருக்கும் எதிர்ப்பு நிலைப்பாட்டில் உள்ளவர்களைக் காட்டிலும் கூடிக்கலையும் கலந்துரையாடல்களில் தலைகளை காட்டி விலாங்கு மீன்களாக வலம்வரும் தரப்பினரை அம்பலப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

சர்வதேச இராஜதந்திரிகளின் பூகோள நலன்சார்ந்த கருத்துருவாக்கத்தில் புரையோடிப்போயுள்ள சிந்தனை வெளிக்குள்ளும், பிராந்திய நலன்சார்ந்து இலங்கை ஆட்சியாளர்களை தடவிக்கொடுக்கும் மென்போக்கு வெளியுறவுக் கொள்கைவாதிகளின் சிந்தை வெளிக்குள்ளும் தான் இன்றைய தமிழ்த் தேசியம் தீர்மானிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இவையெல்லாம், தமிழ் மக்களின் தலைவிதிக்கான வழியைத் தேட முயற்சிக்கும் அரசியல் வெறுமையின் அவலமான சாட்சியங்களே அன்றி வேறென்ன?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்கண்டுசுவாமிகள்

## சிவதொண்டர்களுக்கு வழிகாட்டியானவர்!

ம.சிவயோகசுந்தரம்

யோகர் சுவாமிகள் தமது இறுதிக்காலங்களில் சிவதொண்டன் நிலையம், கைதடி மார்க்கண்டு சுவாமிகள் ஆச்சிரமம் போன்ற இடங்களுக்கு அடிக்கடி வருவார். அவ்வாறாக ஒருநாள் கைதடிக்கு வந்தபோது, அவரைச் சுற்றிநின்ற சோல்பரிப் பிரபுவின் மகன், கந்த சுவாமி சேர் வைத்தியலிங்கம் துரைசாமி மற்றும் அடியவர்களுக்கு மார்க்கண்டு சுவாமிகளை சுட்டிக்காட்டி 'இவன் மார்க்கண்டுவை சிவதொண்டர் தறிகெட்டுப்போகாமல் இருக்க வழிகாட்டியாக விட்டுச்செல்கிறேன்' என அருளினார்.

தெய்வ சித்தம் ஒருவராலும் அறியமுடியாதது. ஆனால், கைதடி ஆச்சிரமம் யோகர்சுவாமிகள் மனதில் முன்பே உதயமாகியுள்ளது. யோகர் சுவாமிகளின் அடியவர்களாக இருந்த எமது தகப்பனார் மயில்வாகனன், சிறிய தந்தையார் விசுவலிங்கம், மைத்துனர் முத்துக்குமாரசுவாமி சற்குணசிங்கம் என்ற இயற்பெயருடைய அளவெட்டி சிவசித்தர் சுவாமிகள் ஆகியோர் யோகர் சுவாமிகளின் அடியவர்களாக விளங்கியவர்கள். இவர் ஒருநாள் கொழும்பில் எமது தந்தையாரைச் சந்தித்து, கைதடி வளவில் ஒரு சிறிய ஆச்சிரமம் அமைக்குமாறு பணித்தார். எமது தந்தையாரும் சிலவேளை இவர் தங்குவதற்கு இந்த ஆச்சிரமத்தை அமைக்கச் சொல்கிறார் என்று ஆச்சிரமத்தை நிறுவினார். ஆனால் சிவசித்தர் சுவாமிகள் இங்கு ஒரு நாளும் தங்கவில்லை. அவர் திருவடிநிழல் என்ற ஆச்சிரமத்திலேயே தங்கியிருந்து, சைவசித்தாந்தத்தைப் போதித்து 1956ஆம் ஆண்டு சமாதியானார்.

வழமைபோல் எமது சிறிய தந்தையார் விசுவலிங்கம் 1950ஆம் ஆண்டு யோகர் சுவாமிகளை தரிசித்தபோது அவரை நோக்கி 'விசுவலிங்கம் உனது வீட்டு ஆச்சிரமத்தில் தங்க உனக்கு ஒரு நல்ல சினேகிதனை தருகிறேன். அவன் போகும்போது உங்களுக்கு எல்லாவற்றையும் தந்து விட்டுச் செல்வான். நாளை அவனை கைதடியில் தங்குவதற்காகக் கூட்டிவருவேன். போய் ஆயத்தங்களைச் செய்' எனப் பணித்தார்.

அடுத்த நாள் யோகர் சுவாமிகள் மார்க்கண்டு சுவாமிகளை அழைத்துவந்து அங்கே தங்க வைத்தார். மார்க்கண்டு சுவாமிகளும் தாம் சமாதியாகும் வரை அந்த ஆச்சிரமத்தில் தங்கி பல்வேறுபட்ட ஆன்மிக அற்புதங்களை நிகழ்த்தினார்.

இளைஞர் மார்க்கண்டு பிரான்பற்று என்ற ஊரை பூர்வீகமாகக் கொண்டவர். இளமையிலே இறை பக்தியுடையவர். தமது கல்வியைப் பூர்த்திசெய்து தியத்தலாவை நில அளவைத் திணைக்களத்தில் பணியாற்றி



தவத்திரு மார்க்கண்டு சுவாமியின் 40ஆவது ஆண்டு குருபூசைத் தினம் இன்று. அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

மார்க்கண்டுவை யோகர்சுவாமிகள் ஆட்கொண்டார். மலைநாட்டுக்குச் செல்லும் போதெல்லாம் மார்க்கண்டவர் வசித்த தியத்தலாவை இல்லத்துக்குச் சென்று அருள் பாலித்தார்.

மார்க்கண்டர் தமது ஐம்பதாம் வயதில் உத்தியோகத்தை உதறித்தள்ளி கொழும்புத்துறை சென்று யோகர் சுவாமிகளை பணிந்து நின்றார். யோகர் சுவாமிகள் சில நாள்கள் மார்க்கண்டரை யாழ்ப்பாணத்தில் தங்கவைத்து பின்னர் கைதடியில் நிரந்தரமாகத் தங்க வைத்தார்.

யோகர் சுவாமிகளும் கைதடி ஆச்சிரமத்துக்கு வந்து மார்க்கண்டருக்கு நற்சிந்தனை என்னும் நல்லமிர்த்தத்தைப் பருக வைத்தார். ஒரு நாள் நல்லூர் தேருக்குச் செல்ல மார்க்கண்டு சுவாமிகள் யோகர் சுவாமிகளை இரந்து நின்றார். உடனே யோகர் சுவாமிகள் மார்க்கண்டு சுவாமிகளின் உடலைச் சுட்டிக்காட்டி இதுதான் நல்லூர். இதுதான் தேர் என்று கூறி பின்னர் தேருக்குச் செல்லுமாறு பணித்தார். யோகர்சுவாமிகள் சந்த சுவாமிகள் சோல்பரி பிரபுவின் மகன் மார்க்கண்டு சுவாமிகளுடன் பலகாலம் தங்கவைத்து பல அருள்மொழிகளைப் புகட்டியுள்ளார். இவை தற்சமயம் சிவதொண்டன் நிலையத்தினரால் நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

மார்க்கண்டு சுவாமிகளும் சற்குருவின் போதனைப்படி ஒரு சோறும் ஒரு கறியும் உண்டு, உண்டியை சுருக்கி சிவதியாகத்தில் ஈடுபட்டார். சில வேளைகளில் அவர் தியானத்தில் இருந்தபோது காகம் குருவிகள் கூட அவர் தலையில் அமர்ந்திருக்கும்.

யோகர் சுவாமிகள் சமாதி நாளன்று, மார்க்கண்டு சுவாமிகள் ஆச்சிரமத்திலிருந்து மூன்று நாள்கள் எங்கு சென்றார் என ஒருவரும் அறியார். பின்னர் திரும்பி வந்து ஒன்றும் அறியாதவர் போல் இருந்தார். அப்பொழுது தான் தம்மை வணங்கும் அடியவர்களுக்கு தம் முன் கற்பூரம் ஏற்றவும், வழிபடவும் அனுமதித்தார். அவர்மேனியோ யோகர் சுவாமிகளின் திருமேனியின் சாரூபத்தைப் பெறும் வண்ணமான ஆற்றல் வாய்ந்ததாயிருந்தது.

மார்க்கண்டு சுவாமிகளின் உறவு திருநாவுக்கரசருக்கும், அப்பூதியடிகளுக்கும் காணப்பட்ட உறவாக இருந்தது. தமது இறுதிக் காலத்தில் குளிப்பு, முழுக்கைக் கைவிட்டு தியானத்தில் இருந்தார். அச்சமயம் அவருடன் சந்தசுவாமிகள் தங்கி பணிவிடை செய்தார். ஒரு நாள் கந்த சுவாமிகளின் கனவில் மார்க்கண்டு சுவாமிகள் 'நீ இங்கிலாந்து சென்று உன் உறவுகளைப் பார்த்து விட்டு வா' எனக் கூறினார். கந்தசுவாமிகள் இங்கிலாந்து சென்ற சில நாள்களில், தமது உடலைத் துறக்க முடிவெடுத்து 1984ஆம் ஆண்டு வைகாசி கார்த்திகை நட்சத்திரத்தில் யோகக்குருநாதன் திருவடிகளைப் பற்றினார். இந்த ஆச்சிரமத்தில் திருவடி பிரதிஷ்டை செய்யப்பெற்று நற்சிந்தனை பாராயணம், கார்த்திகைமாச பூசைகளும் வைகாசியில் குருபூசையும் அடியவர்களால் சிறப்பாக நிறைவேற்றப்படுகின்றன. குருபக்தியே பெரும்பேறு அதைக்கொண்டாடிக் கொண்டாடி நீ ஆறு.







# யாழில் சிறப்புற்ற

# பனைத்திருவிழா

முன்னொரு காலத்தில், தமிழர்களுக்கும் பனைகளுக்குமான தொடர்பு இரண்டறக் கலந்ததாகக் காணப்பட்டது. ஆனால், காலப்போக்கில் நவீனத்துவத்தின் அதீத தலையீட்டால் பனைகளுக்கும் எமக்குமான இடைவெளி அதிகரித்துவரும் இக்காலத்தில், பனை மரத்தின் மகத்துவத்தை காக்கும் வகையில் பனைத்திருவிழா யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக கொண்டாடப்பட்டுள்ளது.

பனை மரங்கள் சூழ்ந்த ரம்மியமான சுழிபுரம் திருவடி நிலைப் பகுதியில் இந்த பனைத் திருவிழா இடம்பெற்றுள்ளது. தமிழர்கள் பனைகளில் இருந்து உச்சப்பயனைப் பெற்றார்கள். பனை உற்பத்திகளைப் பயன்படுத்தி செழிப்பாகவும் வளமாகவும் வாழ்ந்தார்கள். என்பதை எடுத்தியம்பும் விதமாகவும், மெய்ப்பிக்கும் வகையிலும் இந்தப் பனைத்திருவிழா அமைந்திருந்தது.

பனைகளில் இருந்து எத்தனையோ உற்பத்திகள் செய்து செழிப்பாகவும், வளமாகவும், தேக ஆரோக்கியமாகவும் பனைகளோடே வாழ்ந்துவந்த சமூகத்தவர்கள் நாம் என்ற செய்தியை இந்தப் பனைத்திருவிழா வலுவாகவே கொண்டு சென்று சேர்த்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.தவராசா
*முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர், வடக்கு மாகாணசபை*



# ஈழப் போராட்டத்தின் வித்தான தியாகச்செம்மல் சிவகுமாரன்!

இன்று ஜூன் 5ஆம் திகதி. சயனைட் கலாசாரத்தை தமிழ்ப் போராளிகள் மத்தியில் விதைத்த தியாகி பொன் சிவகுமாரன் இறந்து 50 ஆண்டுகளாகின்றன. ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு பொலிஸாரின் சித்திரவதைகளுக்கு ஆளான அனுபவத்தைக் கொண்ட சிவகுமாரன், இன்னொரு சந்தர்ப்பத்தில் பொலிஸாரினால் தான் கைதுசெய்யப்படுவேனாகின் சயனைட் அருந்தி தன்னுயிரை மாய்த்துக் கொள்வேன் என பலதடவைகள் கூறியது இன்றும் என் நினைவலைகளிலிருந்து நீங்க மறுக்கிறது.
தமிழர்களின் போராட்ட வரலாற்றில் சிவகுமாரனைப்போல பல போராளிகளின் உயிர்த்தியாகங்கள், அர்ப்பணிப்புகளின் விளைவாக ஏற்படுத்தப்பட்டதே இலங்கை - இந்திய ஒப்பந்தமும், அதனடிப்படையில் உருவான 13ஆவது அரசமைப்பு திருத்தமும், மாகாணசபை முறைமையுமாகும்.
சிவகுமாரன் உரும்பிராயைச் சேர்ந்த பொன்னத்துரை அன்னலட்சுமி தம்பதியினருக்கு நான்காவது புதல்வனாக 1950ஆம் ஆண்டு ஆவணி மாதம் 26ஆம் திகதி பிறந்தார். சிறுவயதில் அவரை 'திரவியம்' என செல்லமாக அழைத்தனர். யாழ். இந்துக் கல்லூரியில் தனது படிப்பை முடித்துக்கொண்ட அவர், கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் கல்விகற்ற 1970களின் ஆரம்ப காலப்பகுதியில்தான் அவருடனான நட்பு எனக்கு ஏற்பட்டது.
எமது உரிமைகளை ஜனநாயக வழிகளில் வென்றெடுக்க முடியாது என்பதனை அவர் அடிக்கடி சொல்வதுண்டு. ஆயுதப் போராட்டத்தினூடாகவே எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்று கூறுவதுடன் நின்றுவிடாமல் ரின்பால் தகரப்பேணியில் வெடிகுண்டு எவ்வாறு தயாரிப்பது என்பது தொடர்பாகவும் எமக்கு எடுத்துரைப்பார். இவையெல்லாம் எமக்கு அந்தநேரத்தில் புதுமையான மற்றும் ஆச்சரியமான விடயங்களாகவே இருந்தன.

### சாதியத்துக்கு எதிரானவர்

சிவகுமாரன் ஓர் ஆயுதப் போராளி மட்டுமல்ல. தமிழர்கள் மத்தியிலிருந்த சீர்கேடுகளை, குறிப்பாக சாதியக் கொடுமைகளை இள வயதிலிருந்தே எதிர்த்து வந்த ஒருவர். தனது இளம் வயதிலிருந்தே சமபந்தி போஜனத்தை நடத்தி இளைஞர்களிடையே எழுச்சியை உருவாக்கியவர். அத்துடன் மரண வீடுகளில் பறை மேளம் அடிப்பதைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்ற முயற்சியில் உரும்பிராயிலுள்ள அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடி பறைமேளங்களை உரும்பிராய் சந்தியில் போட்டு உடைத்து எரித்தார். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் கூர்மையடைந்திருந்த சாதி வேறுபாடுகளை களையவேண்டும் என்பதில் ஜனநாயக வழியில் முனைப்பாக செயற்பட்டதுடன், அப்போதைய அரசினால் புத்தூர் போன்ற பிரதேசங்களில் ஏழ்மை நிலையிலிருந்தவர்களை அரசின் அனுசரணையுடன் பௌத்த மதமாற்றம் செய்யப்படுவதனை எதிர்த்து ஜனநாயக வழியிலான போராட்டங்களை முன்னெடுத்ததுடன் எம்மையும் அதில் இணைத்துக்கொண்டார்.
ஆசிரியர் முத்துக்குமாரசாமி ஆங்கிலம் கற்பிப்பது மட்டுமல்லாமல், அரசியல் போராட்ட வரலாறுகளையும் இடையிடையே எடுத்துரைப்பதுண்டு. அவரது வீட்டின் அயல் வீட்டில் அவரது தம்பியார் ஆனந்தகுமாரசாமி வசித்து வந்தார். சிவகுமாரன் வல்வெட்டித்துறையிலிருந்து கொண்டு வந்த கந்தகம், பொட்டாசியம் போன்ற வெடிமருந்துகளை ஆனந்தகுமாரசாமியின் வீட்டில் பதுக்கி வைத்திருந்தார். இவ்வாறு பதுக்கி வைக்கப்பட்டிருந்த வெடிமருந்துகளில் ஒருபகுதியினை பாவித்து குண்டைத் தயாரித்து அந்நேரம் பிரதியமைச்சராக இருந்த சோமவீர சந்திரசிறி என்பவர் உரும்பிராயில் உள்ள பாடசாலையொன்றின் நிகழ்விற்கு வந்திருந்தவேளையில் அவரது காரின் பின்பக்கமாக வைத்துள்ளார். நிகழ்வு முடிவடைந்து பிரதியமைச்சரை ஏற்றுவதற்காக கார் புறப்படவிருந்த வேளையில் குண்டு வெடித்தது. இது அவரின் முதற் பரிசோதனை. ஆதலால் காருக்கு சிறிது சேதமேற்பட்டதேயொழிய வேறு சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

### தீவிர அரசியல் போக்குள்ளவர்

உரும்பிராயில் தீவிர அரசியல் போக்குள்ளவர் சிவகுமாரன் என்பது ஊரறிந்த விடயம். இதனால் இதனை யார் செய்திருப்பார் என்பதில் எவருக்கும் சந்தேகமில்லை. அதனடிப்படையில் பொலிஸார் சிவகுமாரனை கைதுசெய்தனர். சிவகுமாரன் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து நாமனைவரும் கைதுசெய்யப்படுவோம் என்பதனை நாம் உணர்ந்துகொண்டோம். அடுத்த நாள் இரவு முத்துக்குமாரசாமியின் வீட்டில் இது தொடர்பாக கூடி ஆராய்ந்து கொண்டிருந்த வேளையில் பெருமளவில் பொலிஸார் அவரது வீட்டுக்கு வந்தனர். பொலிஸாரின் வருகையை கண்ட நாமெல்லோரும் அவரின் வீட்டின் பின்பக்கமாக ஓடி தப்பித்துக்கொண்டோம். முத்துக்குமாரசாமி ஆசிரியர் மட்டும் தப்பியோட மறுத்து பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்து ஆனந்தகுமாரசாமியை பொலிஸார் கைதுசெய்ய முனைந்தவேளை அவரும் வீட்டிலிருந்து தப்பிச்சென்றதால் அவரது அண்ணன் முத்துக்குமாரசாமியை கைதுசெய்தனர். சில நாள்களாக தலைமறைவாக இருந்த ஆனந்தகுமாரசாமி சரணடைந்த பின்னரே அவரது அண்ணன் முத்துக்குமாரசாமி விடுவிக்கப்பட்டார்.
சிவகுமாரனும் ஆனந்தகுமாரசாமியும் அநுராதபுர சிறையில் அடைக்கப்பட்டனர். அக்கால சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு பிணை எடுப்பதானால் கொழும்பிலுள்ள மேல் நீதிமன்றத்துக்கே செல்ல வேண்டும். அத்துடன் மேல் நீதிமன்றத்தில் எல்லா சட்டத்தரணிகளும் வாதாடமுடியாது. நானும் சிவகுமாரனின் தாயாரும் அமிர்தலிங்கத்திடம் சென்று சிவகுமாரனை பிணையில் எடுப்பதற்கு ஆவன செய்யும்படி வேண்டினோம். எங்கள் கோரிக்கையினை ஏற்றுக்கொண்ட அவர், கொழும்பில் வசிக்கும் இராணி சட்டத்தரணி திருச்செல்வத்துக்கு ஒரு கடிதத்தினை கொடுத்து அவரைச் சென்று சந்திக்கும்படி கேட்டுக்கொண்டார்.
நானும் சிவகுமாரின் தாயாரும் மாளிகைபோல இருந்த கொழும்பிலுள்ள அவரது வீட்டுக்குச் சென்றிருந்தோம். அமிர்தலிங்கத்தின் கடிதத்தை படித்துவிட்டு 'எங்களைக் கேட்டா குண்டு வச்சீங்க' என்று ஏசினார். ஒருவாறு அவரைச் சமாளித்து சிவகுமாரனுக்காக ஆஜராக வைத்து பிணையில் விடுவிக்க வழிகோரினோம்.

### தரப்படுத்தல் முறைக்கு எதிர்ப்பை வெளியிட்டார்

அந்தக் காலகட்டத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்க அரசினால் பல்கலைக்கழகத் தரப்படுத்தல் முறை அறிமுகமானது. இன ரீதியான தரப்படுத்தல்தான் முதலில் அறிமுகமானது. தரப்படுத்தலிற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டுமென முடிவுசெய்தோம். இது தொடர்பாக ஆர்வமுள்ள பலரை இணைத்து ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்தினோம். மலாயன் கபேக்கு மேலிருந்த மண்டபத்தில் கூட்டம் நடந்தது. சத்தியசீலன், மாவை, லோரன்ஸ், மகாஉத்தமன், அரியரட்ணம், இலங்கை மன்னன், முத்துகுமாரசுவாமி, சந்திரகுமார், சபாலிங்கம், பலநடராஜ ஐயர் எனப் பலர் கூட்டத்திற்கு வந்திருந்தது நினைவிலிருக்கிறது. மாணவர் பேரவையென செயற்படுவது, தரப்படுத்தலுக்கு எதிராகப் போராட்டம் செய்வதென முடிவு செய்தோம்.
இந்த மாணவர் பேரவை உயர்தர மாணவர்கள் பலரை ஒன்றுதிரட்டி தரப்படுத்தலிற்கு எதிராக மாபெரும் ஊர்வலத்தை நடத்தியது. இந்தத் தரப்படுத்தலுக்கு எதிரான போராட்டங்களில் சிவகுமாரனின் பங்களிப்பு அளப்பரியது. அதனைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டத்தினை சுமந்து சென்ற அமைப்பாக மாணவர் பேரவை அமைகின்றது. இது பிற்காலத்தில் பல ஆயுதக் குழுக்களின் வளர்ச்சிக்கு வித்திட்ட தாய் அமைப்பாகவும் விளங்குகின்றது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியினை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்த அனுசரணையாகச் செயற்பட்ட யாழ். மேயர் அல்பிரட் துரையப்பாவினைக் கொலை செய்வதற்கு யாழ் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் முன்பு எடுத்த முயற்சி துரையப்பா காலதாமதமாக வந்ததால் அவரை உயிர் பிழைக்க வைத்தது. இந்தக் கொலை முயற்சியைத் தொடர்ந்தும் சிவகுமாரன் யாழ். சிறையிலும், அநுராதபுரம் சிறையிலும் ஒன்றரை வருடங்களிற்கு மேலாகக் கைதியாக இருந்தார்.

### உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பணியாற்றினார்

1974ஆம் ஆண்டு தை மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஒரு தீவிர தொண்டனாக சிவகுமாரன் கடமையாற்றினார். அந்த மாநாட்டின் இறுதி நாளன்று பொலிஸாரால் நடத்தப்பட்ட அடாவடித்தனத்தை நேரில் பார்வையிட்ட சிவகுமாரன் அதற்குப் பொறுப்பானவர்களைப் பழிவாங்கியே தீருவேனென்று அன்றே சபதமெடுத்துக் கொண்டார். அந்த உள்ளக் கொதிப்பின் விளைவே தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு அசம்பாவிதத்திற்குப் பொறுப்பதிகாரியாக இருந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசிறி மீது குண்டு வீச்சு நடத்தி சுடமுற்பட்டமைக்குக் காரணமாகும். அம்முயற்சி வெற்றியளிக்காவிட்டாலும் எப்படியோ பழிவாங்கியே தீருவேன் என்ற முனைப்புடன் செயற்பட்டதன் விளைவே சிவகுமாரன் அந்தத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்று ஆறு மாதத்திற்குள்ளேயே தன்னுயிரைப் பலி கொடுக்கும் நிலைக்கு இட்டுச் சென்றது.
பொலிஸ் தேடுதல்களிலிருந்து ஒழிந்து வாழவேண்டிய நிலை மற்றும் தனது தீவிர செயற்பாடுகளுக்கு நிதி ஒரு தடையாக இருந்த சூழலில் பலரிடம் சென்று நிதியுதவி கேட்டும் எல்லோரும் கைவிரித்த நிலையிலேயே கோப்பாய் கிராமிய வங்கியில் பணத்தை கொள்ளையடிக்கும் முடிவிற்கு சிவகுமாரன் வந்தார். அந்தச் செயற்பாடே அவருக்கு காலனாக மாறிவிட்டது.
வங்கியில் கொள்ளையிடமுற்பட்டபோது உசாரடைந்த ஊழியர்களின் செயற்பாட்டால் இவர்கள் வங்கியிலிருந்து ஓடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது பொலிஸாரும் பின் தொடரவே தோட்டங்கள் ஊடாக ஓடிய சிவகுமாரன் காலில் ஏற்கனவே இருந்த காயத்தில் மரவள்ளிக் கட்டை ஏறியதன் விளைவாகத் தொடர்ந்து ஓட முடியாமல் நின்றுள்ளார். இதன்போது அவரைக் கைதுசெய்ய முற்பட்ட பொலிஸாரின் தன்னியக்கத் துப்பாக்கியைப் பறித்த சிவகுமாரன் அவரைச் சுட முயன்றிருக்கிறார். அப்போது அந்தப் பொலிஸ் அதிகாரி தனக்கு மூன்று பெண் பிள்ளைகள் என்றும் அவர்களுடைய தாயாரும் இறந்து விட்டதாகவும் தானும் இறந்தால் அப்பிள்ளைகள் அநாதைகளாகி விடுவார்களென்று கெஞ்சியதன் அடிப்படையில் சிவகுமாரன் அவரைச் சுடாது தன்னிடமிருந்த சயனைட்டை தானே அருந்தித் தன்னுயிரை மாய்த்துக் கொண்டார். சிவகுமாரன் வைத்தியசாலையில் இறந்த பின்பு அவரது கைக் கடிகாரம் மற்றும் அவரது காற்சட்டைப் பையிலிருந்த பணம் ஆகியவற்றை சிவகுமாரனின் தாயிடம் கையளித்துவிட்டு 'உங்கள் மகன் ஓர் தெய்வப் பிறவி நினைத்திருந்தால் என்னைச் சுட்டிருக்கலாம்' எனக் கூறி அந்தப் பொலிஸ் அதிகாரி அவரது காலில் வீழ்ந்து வணங்கியுள்ளார்.
தியாகி சிவகுமாரனின் உருவச்சிலை உரும்பிராயில் மூன்று தடவைகள் அமைக்கப்பட்டு இராணுவத்தினரால் உடைக்கப்பட்ட நிலையில் வெண்கலத்தைக் கொண்டு அமைக்கப்பட்ட நான்காவது சிலையே இன்று உரும்பிராய் சந்தை வளாகத்தில் காணப்படுகின்றது. அவரது உடல் தகனம் செய்யப்பட்ட வேம்படி மயானத்தில் நினைவுத் தூபியும் அமைந்துள்ளது. அவரது ஐம்பதாவது ஆண்டு நினைவுதினம்; உரும்பிராயில் நினைவுச்சிலை மற்றும் தூபி அமைந்துள்ள இடங்களில் இன்று நடைபெறவுள்ளது.
தமிழர் போராட்ட வளர்ச்சி என்பது ஒரு வகையான அஞ்சலோட்டம். அந்த அஞ்சலோட்டத்தில் ஆயுதப் போராட்டமென்ற அஞ்சலோட்டத்தை ஆரம்பித்து வைத்தது சிவகுமாரனென்றால் அது மிகையாகாது. தியாகி சிவகுமாரன் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தின் வரலாற்றுச் சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்பானென்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி திருமண சேவை

**பதிவுக் கட்டணங்கள் யாவும் இலவசம்**


மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவுசெய்யப்பட்டு, மிகத்துரிதமாக திருமணம் நிறைவேற்றிக் கொடுக்கப்படும். உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர்.

10/2, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
(Bcas கம்பஸ் இற்கு பக்கத்து லேன்)

**021 222 9306, 077 138 7596, 071 999 9306**

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 18 • 02 • 1944



விண்ணில் 09 • 06 • 2021

**அமரர் இரத்தினம் கனகலிங்கம்**
(மனேஜர்)
திதி: சதுர்த்தசி 05.06.2024

கண்ணுக்கு ஒளியாய், நெஞ்சத்தில் நினைவாய்,
நிலையாய் என்றும் எங்களோடு
எங்களின் இறைவனாய் - என்றும்
எங்களை வழிநடத்த வணங்குகிறோம்.

விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS/55268) J-1

# மீண்டும் பிரதமராகும் மோடிக்கு ரெலோ வாழ்த்து

யாழ்ப்பாணம், ஜூன் 5

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற பிரதமர் மோடிக்கு, ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் வாழ்த்துத் தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

இந்திய நாட்டின் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தங்களுடைய கட்சி நாடு தழுவிய ரீதியில் பெற்ற வெற்றிக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

தங்களின் தலைமையில் பாரதீய ஜனதாக் கட்சி தொடர்ந்தும் மூன்றாவது தடவையும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியைப் பெற்று ஆட்சி அமைப்பது தங்கள் மீது மக்கள் கொண்டுள்ள அதீத நம்பிக்கையை பறைசாற்றுகிறது.

தங்களது இந்த வெற்றிக்கு எமது ஈழ மக்கள் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமிதம் அடைகிறேன் என்றுள்ளது.

(ஓ-27)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும். ஒரு சதுர அடி - 100 ரூபாய்.

**077 334 1281**

## THE ROYAL COLLEGE OF JAFFNA

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில

By ந. விக்னேஸ்வரன் ஆச்சார்யார்

குபேரன் கட்டட மாடி, சங்கானை.

தொடர்பு: **077 675 1649**

(CS/55251) J-1

## பற் சிகிச்சை உபகரணங்கள் விற்பனைக்கு




கொழும்பில் பல் வைத்தியரினால் பாவிக்கப்பட்ட நல்ல நிலையில் உள்ள பற்சிகிச்சை உபகரணங்கள் விற்பனைக்கு உள்ளன. தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்

**077 835 8424, 076 797 8529**

(CS/55263) J-1

# செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், ஜூன் 5


கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை முதல்வர் குமாரசாமி கெங்காரதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய வணிகக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி அம்பிகை தர்சினி றஞ்சன், சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் வடக்குமாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான சி.தவராசா ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

(ச)

## மரண அறிவித்தல்

மலர்வு • 17 • 08 • 1965



உதிர்வு • 04 • 06 • 2024

**கோபாலசிங்கம் குலசிங்கம்**

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கோபாலசிங்கம் குலசிங்கம் நேற்று (04.06.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோபாலசிங்கம் - கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், இராசமலர் கண்ணன், சறோயினிதேவி, றஞ்சினி (கனடா), நிர்மலா (கனடா), நித்தியவதனி (கனடா), ஜெயசுதா (கனடா), ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கணேசநாதன், சுமதி, கிருபைராஜா, மோகனரூபன், நித்தியராஜா, மனோகரதாஸ், மதிசங்கர் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், காலஞ்சென்ற கிருத்திகா பமீலன், கபிலன், சஞ்சிதா, யனோசிகா, வினோபா, அபறாயிதன், சுகிர்தன், நர்மதா, சரணியா, சஜித் (கனடா), நிரோஸ் (கனடா), வர்சனா (கனடா), வினுசியா (கனடா), அஜந்தன் (கனடா), தர்சிகா (கனடா), சர்மி (கனடா), மணிகண்டன் (கனடா), நீலகண்டன் (கனடா), யதுஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், லிஸாரா, ஆர்த்திகன், ஆரண்யன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2024) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் குப்பிளான் கடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தொடர்பு:
**077 614 6462**

(cr 42551) (N-1)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 24 • 12 • 1933



மறைவு 31 • 05 • 2024

**சிவசம்பு சச்சிதானந்தன்**

காரைநகர் ஆயிலியைப் பிறப்பிடமாகவும், மணற்காடு முத்துமாரி அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு சச்சிதானந்தன் கடந்த 31.05.2024 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - உமாதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராஜா - வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவசிதம்பரநாதன் (லண்டன்), நாகேஸ்வரி (ஓய்வு பெற்ற சிரேஷ்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், யாழ் மாநகரசபை சித்தமருத்துவத்துறை), சிவசத்தியநாதன் (கனடா), நாகராணி (முன்னாள் பாடசாலை பற்சிகிச்சையாளர் - கனடா), நாகவதனா (முன்னாள் ஆசிரியை யாழ் செங்குந்த இந்துக் கல்லூரி - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரன் (தபால் அத்தியட்சகர்), ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் கமலாதேவி ஆகியோரின் மைத்துனரும், ஜெயலட்சுமி, செல்வராஜா, விமலினி, சோதிரூபன், திலீபன் ஆகியோரின் மாமனாரும், தேனுகா, கம்ஷா, மதுஷா, சௌமியா, சரண்யா, சாரங்கன், அபிசுதன், கயல்விழி, கம்சிகன், நிமலி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.06.2024) வியாழக்கிழமை காலை 07.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
**077 691 3217**

10/2 ... சபை வீதி,
... காரைநகர் மேற்கு.

(CS/55269) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## SLIIT NORTHERN UNI யின் நான்கு வருட கல்வி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட பட்டப்படிப்புகள்.

**BSc(Hons) in Information Technology Specialising in :**

- Information Technology
- Software Engineering
- Cyber Security
- Data Science
- Interactive Media
- Computer Systems & Network Engineering
- Information Systems Engineering

**BBA(Hons) Specialising in :**

- Business Analytics
- Marketing Management
- Accounting & Finance
- Logistics & Supply Chain Management

**SLIIT CITY UNI Program at NorthernUni**

- Foundation in Information Technolgy.
- BSc (Hons) Computer Science and Software Engineering.
- BSc (Hons) Computer Networking.
- Foundation in Business Management.
- BA (Hons) Business Administration.

**நினைவில் கொள்ள வேண்டிய திகதி**

விண்ணப்ப முடிவுத்திகதி

**26 JUNE 2024**

தகுதிகாண் பரீட்சை

**29 JUNE 2024**
**(10:00AM TO 11:00AM)**

**மொழி மூலம்**
தமிழ், ஆங்கிலம், சிங்களம்

NORTHERN UNI

Call us now:
**077 147 1471**

northernuni.lk
apply@northernuni.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவு நிகழ்வு

யாழ்., ஜுன் 5 தமிழ் அரசியல் தலைவரும், உடுப்பிட்டித் தொகுதியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், துணை சபாநாய கருமான அமரர் மு.சிவசிதம்பரத் தின் 22ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு இன்று இடம்பெறவுள் ளது.

கரவெட்டி அபிவி ருத்தி ஒன்றியத் தின் ஏற்பாட்டில், நெல்லியடிச் சந்தியில் அமைந் துள்ள அன்னா ரின் உருவச் சிலையடியில் கரவெட்டி அபிவி ருத்தி ஒன்றியத் தலைவர் உபாலி பொன்னம்பலம் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறவுள் ளன. (ம-66)


## பெயர் மாற்றம்

இலங்கை ஜனநாயகக் குடியரசு மக்களுக்கு அறியத்தருவதாவது **முத்துக்குமாரு யோகேஸ்வரி** ஆகிய நான் 2008 ஆம் ஆண்டு திருமணத்திற்காக **பாத்திமா அஸ்கா** என மாற்றம் செய்தேன் ஆயினும் தற்போது எனது விருப்பத்திற்கு இணங்க **யோகேஸ்வரி** என மாற்றம் செய்து இந்து சமயத்திற்கு மாறியுள்ளேன். இனிவரும் காலங்களில் **யோகேஸ்வரி** என்றே சகல ஆவணங்களிலும் கையொப்பமிடுவேன் என அறியத்தருகின்றேன்.

(CS/55287) J-1 **யோகேஸ்வரி**

## யாழ் நகரில் உள்ள பிரபல உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை

**உடனடி வேலைவாய்ப்பு**

- **Supervisor**
  - Gender :- Male/Female
  - Experience in the relevant field
- **Delivery (Immediate Vacancy)**
  - Gender :- Male • Salary :- Interview
- **Cashier**
  - Gender :- Female/Male • Male (Experience)
  - Salary :- Interview
  - அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- **Accountant (கணக்காளர்)**
  - Gender :- Male/Female
  - Experience in the relevant field.
- **லொத்தர் டிக்கெட் விற்பனையாளர்**
  - Gender :- Male • Age :- 40 - 60
  - Salary :- Interview
- **Waiter**
  - Gender :- Male • Salary :- Interview
  - Expected :- Hotel Management படித்தவர்கள் விரும்பத்தக்கது.
- **மரக்கறி வெட்டுதல், கழுவுதல் (சுத்தம் செய்தல்)**
  - Gender :- Male/Female • Salary :- Interview
- **Cleaning (கிளீனிங்)**
  - ஆண்/பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.
  - Hotel Management முடித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
  - Per day 1500/- வழங்கப்படும்.

**Lavins Restaurant**

43, ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி ,யாழ்ப்பாணம்.


**Contact :- 076 560 3030**

(CS/55266) J-1



ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



மலர்வு 09 . 07 . 1994

உதிர்வு 04 . 06 . 2024

### ரமேஷ் கோவர்த்தனன் (தனன்)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியை வசிப்பிட மாகவும் கொண்ட ரமேஷ் கோவர்த்தனன் (தனன்) நேற்று (04.06.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் ரமேஷ் - தவராணி தம்பதியரின் அன்பு மகனும், தன்ஜா, தன்சிகா, டக்சிகா, திவ்யா ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகலிங்கம் - தனலட்சுமி, சின்னத்தம்பி - கனகம்மா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2024) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் அச்சுவேலி பத்தமேனி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

அளவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்

(cs 55261) (N-1) 076 236 7255 / 077 917 7040



## மரண அறிவித்தல்



பிறப்பு 25 . 02 . 1962

இறப்பு 03 . 06 . 2024

### இராசரத்தினம் தவேந்திரா (தவம்)

(ஓய்வு பெற்ற உற்பத்தி முகாரி - அஸ்பெஸ்டஸ் சிமெந்து இன்டஸ்றீஸ் - இரத்மலானை, அகில இலங்கை சமாதான நீதவான்)

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், தெகிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் தவேந்திரா (தவம்) ஓய்வு பெற்ற உற்பத்தி முகாரி - அஸ்பெஸ்டஸ் சிமெந்து இன்டஸ்றீஸ் இரத்மலானை, (அகில இலங்கை சமாதான நீதவான்) நேற்று முன்தினம் (03.06.2024) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - தையல்நாயகி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான தியாகராசா - முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், தேவனாயகியின் (ஓய்வு பெற்ற பதிவாளர் நாயகம் திணைக்களம், பத்திரமுல்லை - சத்திய பிரமாண மொழிபெயர்ப்பாளர், சமாதான நீதவான்) அன்புக் கணவரும், அனிதா, திவ்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரகுபரன், ரமணன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பத்மினி, புவனேந்திரா, சத்தியேந்திரா, ராஜேந்திரா ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.06.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

203/5 கண்டி வீதி, அரியாலை.

தகவல்: மனைவி

(CS/55259) J-1 076 792 9992



## மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 05 . 1955

மறைவு 03 . 06 . 2024

### ஞானசீலன் மேரிமெக்டலின் (பூங்கொடி)

இல. 489 / 27, அல்வாய் வடமத்தி சக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானசீலன் மேரிமெக்டலின் (பூங்கொடி) நேற்றுமுன்தினம் (03.06.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவிரிபிலிப் மற்றும் மரியமுத்து தம்பதியரின் அன்பு மகளும், குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மரியநாயகம் - றெஜினா (புஸ்பம்) தம்பதியரின் அன்பு மருமகளும், மரியநாயகம் ஞானசீலனின் (இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திணைக்களம் - யாழ்ப்பாணம், ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, முன்னாள் பிரதேச செய்தியாளர் - உதயன் பத்திரிகை நிறுவனம் - யாழப்பாணம்), அன்பு மனைவியும், கிறேஸ் சுமதி நிஸாந்தன் (ஆசிரியை - மன் / வட்டக்கண்டல் அ.த.க.பாடசாலை), கப்றினா பிரதாபன் (கணினி தொழில்நுட்பவியலாளர் சதுலக்ஸ் நிறுவனம் - யாழ்ப்பாணம் - நாவலர் வீதி), ஞானசீலன் நிலக்ஷன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், லெட்சுமணன் நிஸாந்தன் (N.S. ஹாட்வெயர் - மன்னார்), சிவப்பிரகாசம் பிரதாபன் (உரிமையாளர் சதுலக்கஸ் நிறுவனம் நாவலர் வீதி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியும், டில்ருக்ஷாந், அதுஷாஜ ஸ்ரீ ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற ராஜதாசன், மரியமலர் மற்றும் அலிஸ்ரன் ஞானமணி, அல்பிறட், மற்றில்டா, மரிய பூங்கொடி ஆகியோரின் அன்புச் சகோதரியும், யூலியட்திரேசா சாள்ஸ் (ஜேர்மணி), மேரிறோஸ் ஷில்பட், மேரிலில்லி-சொ.சிறில், ஆனந்தா பத்திக்குமார், இராஜேஸ்வரி மோகன் ( ஜேர்மனி), யூலியஸ் (ஜேர்மனி), மோகன், எட்வீசம்மா, மரியறோசலின், பேபி குணகுந்தா, ஞானமலர், காலஞ்சென்ற டேவிட் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு இறுதி ஆராதனை இன்று (05.06.2024) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் சக்கோட்டை புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு சக்கோட்டை பழங்கோவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

ம.ஞானசீலன் (கணவர்) (077 952 9582)

(cs 55262) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனரீதியான குரோதத்தை விதைத்தவர் மஹிந்தவே!

## முஜிபுர் ரஹ்மான் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 5

போர் வெற்றியை இனங்களுக்கு இடையிலான குரோதத்தை ஏற்படுத்தவே மஹிந்த ராஜபக்ச பயன்படுத்தினார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"2009ஆம் ஆண்டில் போரை முடிவுக்கு கொண்டுவந்த பின்னர், இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டு, நல்லிணக்கத்தை ஏற்படுத்தி ஒரு தாயின் பிள்ளைகளாக முன்னோக்கிச் செல்வதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கவே செய்தன. ஆனால், அந்த வாய்ப்புகளையெல்லாம் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ச சரிவரப் பயன்படுத்தவில்லை.

மாறாக போர் வெற்றியென்பது ஆட்சியாளர்களின் தேவைக்கேற்ப, அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கேற்பவே பயன்படுத்தப்பட்டது. இனங்களுக்கிடையில் குரோதம் விதைக்கப்பட்டது. கடந்த காலங்களில் இவற்றைக் காணமுடிந்தது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் முன்னெடுக்கப்படவேண்டிய விடயங்கள் செய்யப்படவில்லை. இன ஐக்கியம் ஏற்படுத்தப்படவில்லை. நல்லிணக்கம் ஏற்படவில்லை. வடக்கு - கிழக்கில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படவில்லை. போர் முடிந்த பிறகு தற்போது வரை கடந்துவந்துள்ள பாதை தொடர்பில் திருப்தியடைய முடியாது" - என்றார். (அ-ம-44)

# தண்டனை அனுபவித்தும் திருந்தாத இளையோர்

## கோப்பாயில் மீண்டும் கைது



யாழ்ப்பாணம், ஜூன் 5

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சிறுமியும், இளைஞனும் கோப்பாய் பிரதேசத்தில் வைத்து நேற்றுமுன்தினம் இரவு சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு, சிலாவத்தையைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமியும், புதுக்குடியிருப்பைச் சேர்ந்த 19 வயது இளைஞனும் காதலித்துள்ளனர். சிறுமி 6 மாதங்களுக்கு முன்னர் இளைஞனுடன் தப்பிச் சென்ற நிலையில் இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இளைஞனுக்கு 3 மாதங்கள் சிறைத்தண்டனை விதித்தும், சிறுமியை சீர்திருத்தப் பள்ளியில் சேர்த்தும் நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது. இந்த நிலையில் சிறுமி ஒரு வாரத்துக்கு முன்னர் சீர்திருத்தப் பள்ளியில் இருந்து வீட்டுக்குச் சென்றுள்ளார். இந்த நிலையில் சிறுமி வீட்டிலிருந்து தப்பி, மீண்டும் தான் காதலித்த இளைஞனுடன் யாழ்ப்பாணத்தை நோக்கி வந்துள்ளார். இருவரையும் பாதுகாப்பு நோக்கம் கருதி கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (அ-ஒ-125)

### யாழ்...

போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் நான்காவது தேசிய மருத்துவமனையாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையை தரமுயர்த்துவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தரமுயர்த்தப்படுவதாயின், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு இருக்கும் தேவைப்பாடுகள் தொடர்பில் தெரிவித்துள்ளோம்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஆயிரத்து 350 படுக்கைகளுடனான விடுதிகள் தற்போது காணப்படுகின்றன. 325 மருத்துவர்கள், 680 தாதிகள் உட்பட 2 ஆயிரத்து 150 பேர் தற்போது கடமை புரிந்து வருகின்றனர். இவ்வாறிருக்கையில், தேசிய மருத்துவமனையாகத் தரமுயர்த்தப்படுவதாயின் 200 மேலதிக தாதியர்களும், 100 மருத்துவர்களும் தேவைப்படுகின்றனர்.

மருத்துவர்களுக்கான வெற்றிடங்கள் ஓரளவு நிரப்பப்பட்ட போதிலும், மருத்துவ நிபுணர்களுக்கு இன்னமும் பற்றாக்குறை காணப்படுகின்றது. சிறப்புப் பிரிவுகள், இருதய சிகிக்சை மற்றும் இருதய சத்திர சிகிச்சை என்பவற்றுக்கு மருத்துவர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது. எனவே இவற்றை நிவர்த்திசெய்ய சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளவேண்டும் - என்றார். (அ-ம-27)

### 15 அமைப்பு...

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு, தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தேசிய தவ்ஹீத் ஜாமத், நாடு கடந்த தமிழீழ அரசு, கனேடிய தேசிய தமிழ் கவுன்ஸில், புலம்பெயர் நாடுகளில் செயற்படும் தமிழ் இளைஞர் பேரவைகள் உள்ளிட்ட 15 அமைப்புகளின் சொத்துகளும், இவற்றுடன் தொடர்புடையவர்களினதும் இவற்றுக்கு நிதி ஆதாரங்களை வழங்கும் 210 தனிநபர்களினதும் சொத்துகளே இவ்வாறு முடக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டமை, பயங்கரவாத அமைப்புகளின் நிதி ஆதாரங்களைப் பலப்படுத்தியமை உள்ளிட்ட குற்றங்களுக்காகவே இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார். (ம-6)

### மோடியின்...

ஏழு கட்டங்களாக இடம்பெற்ற, இந்திய மக்களவைத் தேர்தல் கடந்த முதலாம் திகதியுடன் முடிவுக்கு வந்தது. நேற்று வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. பா.ஜ.க. கட்சியினர் 272க்கும் கூடுதலான தொகுதிகளில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்த போது, பிரதமர் மோடி வெற்றிபெற்றுவிட்டதாகத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் சிவசேனையினர் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

மோதகம், லட்டு போன்ற இனிப்புப் பண்டங்கள் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தவர்களுக்கும், வீதியால் சென்றவர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் பரிமாறப்பட்டன. இறுதியாக வெடி கொளுத்தியும் அவர்கள் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். (அ-ம-66)

### மோடி...

கொளுத்தி , இனிப்புகளை வழங்கி கொண்டாட்டத்தில் ஈடுபட்டபோது, பொலிஸார் அங்கு வந்துள்ளனர். இதன்போது, கொண்டாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம், 'மோடி உங்களுக்கு என்ன செய்தார்?' எனப் பொலிஸார் நிகழ்வின் ஏற்பாட்டாளர்களைப் பார்த்துக் கேட்டுள்ளனர்.

அதற்கு கொண்டாட்டத்தில் ஈடுபட்டோர் 'இலங்கை கடும் பொருளாதார நெருக்கடியிலிருந்தபோது இந்தியப் பிரதமராக இருந்த மோடி தான் பெரும் நிதி உதவி செய்து நாட்டைக் காப்பாற்றினார்' என்று சிங்கள மொழியில் சொல்லியிருக்கின்றனர். இந்தப் பதிலைக் கேட்ட பொலிஸார் பதில் கூறமுடியாமல், சிரித்து மழுப்பியவாறே அவ்விடத்தை விட்டு அகன்று சென்றனர். (அ-ம-66)

### ஐ.நா....

இந்தப் பயணத்தின்போது, காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் உள்ளிட்ட பல தரப்பினரையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

மன்னார் நகரப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட சதொச மனிதப் புதைகுழிக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சென்றதுடன், அங்குள்ள நிலைமைகள் தொடர்பிலும் ஆராய்ந்தார். (அ-ம-56)

### வீட்டுக்குள்...

தப்பித்துள்ளனர்.

வீடு பகுதியளவில் சேதமடைந்ததுடன் வாகனமும் சேதமடைந்தது. விபத்துத் தொடர்பில் நெடுங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ஒ-110)

### புலனாய்வுத்துறைப்...

பெயர்ந்து பிரான்ஸில் வசித்து வந்த நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த விநாயகத்தின் உடல்நிலை மோசமடைந்ததை அடுத்து பிரான்ஸில் உள்ள மருத்துவமனையொன்றில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிர் பிரிந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-100)

### ஹெரோய்னுடன்...

ஹெரோய்னை விற்பனைக்குத் தயாராக வைத்திருந்த நிலையிலேயே அந்தப் பெண் கைது செய்யப்பட்டதுடன், அவரிடம் இருந்து 5 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. கைதான யுவதியிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-18)

### இந்தியாவில்...

543 தொகுதிகளைக் கொண்ட இந்திய மக்களவைத் தேர்தலுக்கு 7 கட்டங்களாக வாக்குப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. ஏழாவதும் இறுதியானதுமான வாக்குப் பதிவுகள் கடந்த முதலாம் திகதி முடிவுக்குவந்தன. இதைத் தொடர்ந்து நேற்றுக் காலை 8 மணிமுதல் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

543 தொகுதிகளில், 272 தொகுதிகளைக் கைப்பற்றும் தரப்பு ஆட்சியமைக்கும் என்ற நிலையில், 290 தொகுதிகளில் பா.ஜ.க. வெற்றிபெறும் என்ற தோற்றப்பாடே நேற்று இரவு வரை இருந்தது. 235 தொகுதிகளில் 'இண்டியா' கூட்டணி ஆதிக்கம் செலுத்திவந்தது.

பா.ஜ.க.வின் வெற்றி கிட்டத்தட்ட உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், கடந்த தேர்தலுடன் ஒப்பிடுகையில் அந்தக் கட்சி செல்வாக்கை இழந்துள்ளதாகவே கருதப்படுகின்றது. ஏனெனில், கடந்த 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற மக்களவைத் தேர்தலில் 359 தொகுதிகளில் பா.ஜ.க. வெற்றிபெற்றிருந்த நிலையில், இந்த வருடம் பா.ஜ.க.வால் 290 தொகுதிகளையே கைப்பற்ற முடிந்தமை அதன் செல்வாக்குச் சரிந்துள்ளதையே காண்பிப்பதாகப் பலரும் தெரிவித்துள்ளனர்.

**தமிழகத்தில் தி.மு.க.**

இதேவேளை - பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தமிழகத்தில் 40 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி அமோக வெற்றிபெற்றது. இம்முறை திராவிடக் கட்சிகளிடம் இருந்து ஆட்சியைப் பறிப்பது என்பதில் பா.ஜ.க. அதி தீவிரத்துடன் செயற்பட்டு வந்தது. கடந்த இரண்டு மாதங்களில் ஏழு தடவைகள் மோடி தமிழகத்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். இவற்றையெல்லாம் தாண்டி தி.மு.க. பெற்றுள்ள வெற்றி பேரெழுச்சி என்றே கருதப்படுகின்றது. இதேபோல், மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜி ஆட்சியைத் தக்கவைப்பது உறுதியாகியுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதாந்த செலவினத்தை விடவும் போதைப்பொருள் செலவு அதிகம்

## சங்கானை பிரதேச செயலர் ஆதங்கம்

**யாழ்ப்பாணம், ஜூன் 5**

**போதைப்பொருள் பாவனைக்காக நாளாந்தம் செலவிடப்படுகின்ற பணத்தை குடும்பத்தின் மாதாந்தச் செலவினத்தோடு ஒப்பிடுகின்ற பொழுது அது உயர்ந்ததாகவே காணப்படுகின்றது. எதிர்கால சந்ததி புகைத்தல் மற்றும் மதுபாவனை குறித்து விழிப்புடன் செயற்படவேண்டும் என்று சங்கானை பிரதேச செயலர் கவிதா உதயகுமார் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது, அண்மைக் காலங்களில் எமது இளம் சமுதாயத்தினரிடையே புகைப்பொருள் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த பழக்கங்கள் குறைக்கப்பட வேண்டும். பொருளாதாரரீதியாக குடும்பங்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில் புகைத்தல் மற்றும் மதுபாவனை இன்னமும் வறுமையை அதிகரிப்பதாகவே அமையும். உடல் நலக் குறைவு மற்றும் குடும்பங் களுக் கிடையிலான பிரிவுகள் ஏற்படுவதற்கு இது பிரதான காரணமாக அமைகின்றது. பிள்ளைகளின் கல்வியையும் பாதிக்கிறது. எனவே எதிர்கால சந்ததி நாட்டினுடைய அபி விருத்திக்காகவும், குடும்ப மேம்பாட்டுக்காகவும் விழிப்புடன் செயற்பட வேண்டும் - என்றார். (ஒ-25-125)



சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நல்லூர்ப் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவின் ஏற்பாட்டில் 'நண்பா போதைக்கு புகைத்தலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்', 'வலுவான தேசமொன்றை நிதமும் கட்டி எழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வுப் பேரணி கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (எ-25-66)

# நாட்டில் அதிகரிக்கும் ஐஸ், கஞ்சா பாவனை

## அம்பலப்படுத்தும் புள்ளிவிவரம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

இலங்கையில் தற்போது ஹெரோய்ன் பாவனை குறைந்திருப்பினும் ஐஸ், கஞ்சா போன்றவற்றின் பாவனை அதிகரித்துள்ளது என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

2023 ஆம் ஆண்டு ஹெரோய்ன் தொடர்பான கைதுகள் 5 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளன. அதேவேளை ஐஸ், கஞ்சா தொடர்பான கைதுகள் 28 வீதமாக அதிகரித்துள்ளன.

2022 ஆம் ஆண்டு 69 ஆயிரத்து 688 ஹெரோய்ன் பாவனையாளர்களும், 53 அயிரத்து 759 கஞ்சா பாவனையாளர்களும், ,22 ஆயிரத்து 631ஐஸ் பாவனையாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2023 ஆம் ஆண்டு 66 ஆயிரத்து 142 ஹெரோய்ன் பாவனையாளர்களும், 68 ஆயிரத்து 458 கஞ்சா பாவனையாளர்களும், 2 ஆயிரத்து 696 ஐஸ் பாவனையாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2022 ஆம் ஆண்டு 1 இலட்சத்து 52 ஆயிரத்து 979 பேரும், 2023 ஆம் ஆண்டு 1 இலட்சத்து 62 ஆயிரத்து 88 பேரும் போதைவஸ்து தொடர்பான குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-25-6)


### தேவை
கொப்பறா, தேங்காய், நெல், தானியங்கள்
(வியாபாரிகள் விரும்பத்தக்கது)
தொடர்பு: 077 772 22 14

### வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை
சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 173 7684

### IELTS - New Batch ஆரம்பம்
Sp.Offer 10% Discount
உடன் Basic & Advance Grammar Classes First Class (Free of Charge)
இல.53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd, Jaffna.
077 798 9830 By:- B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

### A/L தொழினுட்பப்பிரிவு
Techna
Technical Institute
யாழ் மாவட்டத்தில் இருந்து தொடர்ந்து தொழினுட்பப்பாடத்தில் அதிக மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு வழிகாட்டும் பெற்றோர்களினதும், மாணவர்களினதும் நன்மதிப்பை பெற்ற ஒரே கல்வி நிறுவனம்
A/L 2026 — புதிய பிரிவு ஆரம்பம்
செயன்முறை வகுப்புக்களும் நடைபெறுகின்றன
A/L 2023 REPEAT BATCH — 05.06.2024 புதன்கிழமை மாலை 3.30மணிக்கு
A/L 2024 பிரிவு, A/L 2025 பிரிவு — விஷேட பிரிவுகள்
மேலதிக விபரங்களுக்கு 077 170 3549
வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

### அலுவலக கட்டடம் வாடகைக்குத் தேவை
இலங்கையில் 17 வருடங்களாக முன்னணி வகிக்கும் REM Solar நிறுவனத்திற்கு யாழ்ப்பாணத்தில் காரியாலய கிளை அமைப்பதற்கு யாழ் நகரை அண்டிய பகுதியில் 3 அல்லது 4 அறைகளைக் கொண்ட கட்டடம் வாடகைக்குத் தேவை.
(CS/55260) J-1
077 137 6954, 074 091 7981

### மணமகள் தேவை
யாழ். இந்து. (V) கௌரவ குடும்பம். 27.12.1982 இல் பிறந்த பரணி நட்சத்திரம் கிரகபாவம் 15. B.Com பட்டதாரி. அபிவிருத்தி உத்தியோகத்தராக பணிபுரியும் மணமகனுக்கு அரச தொழில் / தனியார் தொழிலில் பணிபுரியும் மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
(CS/55249) J-1
075 665 6348

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில்
A-9 வீதி முகப்புடன் 32 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- பதினெட்டடி பாதை (18).
- கைதடிச் சந்தி 100M தூரம்.
- சித்த வைத்தியசாலை முன்பாக.
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
- நகர அபிவிருத்தி அதிகார சபையின் (UDA) அனுமதி பெற்றது.

குரு: 077-029 4164, 077-329 4130, 077-294 1521

### ஆட்கள் தேவை
அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இயங்கி வரும் எண்ணெய் உற்பத்தி தொழிற்சாலையான Venkadeshwara Agro Industry (PVT) Ltd. இல் ஆய்வக பொறுப்பாளர் (Lab Chemist) தேவை.
Qualification- Bsc in Food Science & Techonology
ஆர்வம் உள்ளவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையை suganthon@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு சமர்ப்பிக்கவும்.




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org